Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-12 | 27-12-2004 | திங்கட்கிழமை | ஓசை -313

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10930) T.P: 024-222 4247


## அந்தமான் கடலடிப் பூகம்பத்தினால்

# கரையைத் தாக்கிய பேரலைகளால்

# தாயகத்தில் நிகழ்ந்த பேரழிவுகள்!

- 4000இற்கும் மேற்பட்டோர் பலி.
- இரண்டாயிரத்திற்கும்மேற்பட்டோரைக்காணவில்லை.
- பல ஆயிரம் பேர் காயம்.
- நூற்றிற்கும் மேற்பட்ட கிராமங்கள் அழிவு.
- இலட்சக்கணக்கானோர் வீடிழப்பு.
- பல ஆயிரம் கோடி ரூபா சொத்தழிவு

நேற்றுக்காலை அந்தமான் கடற்பரப்பின் அடியில் ஏற்பட்ட புவியதிர்ச்சி காரணமாக எழுந்த பேரலைகளினால் தமிழர் தாயகப் பகுதியில் மேற் கூறப்பட்ட பாரிய உயிரிழப்புக்களும், சொத்திழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கிழக்குக்கரையோர பிரதேசங்களே பெரும்பாதிப்புக்குள்ளானவை ஆகும். அத்தோடு சிறிலங்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களும் பாதிப்புக்குள்ளாகின. நீரின் அடியில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட விரிசல் காரணமாக நீரின் அடியில் அதிர்வின் வேகம் 115–250கி. மீற்றராக இருந்ததாகவும், ஒரு அலையின்வேகம் மணிக்கு 500கி.மீற்றராக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



## முல்லை, வடமராட்சி கிழக்கு கரையோரத்தில் மிகப் பெரும் அனர்த்தம்!

### நகர் மற்றும் சூழவுள்ள பகுதிகளில் பேரழிவு

(அலுவலக செய்தியாளர்)

கடற்கொந்தளிப்பு காரணமாக முல்லை மாவட்டத்தின் கரையோரப்பகுதிகள் அனைத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 1500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். 1000 இற்கும் அதிகமானவர்கள் காணாமல் போயுள்ளனர்.

நேற்றுகாலை 9:00 மணிக்கு கடலில் திடீரென ஏற்பட்ட கொந்தளிப்புக்காரணமாகவே இந்த நிலை உருவாகியுள்ளது. இதன்காரணமாக முல்லை நகரப்பகுதி முற்றாக அழிவடைந்துள்ளது. மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் அனைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு., அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் பெரும் உயிரிழப்பு!

### பல ஆயிரம் பேர் இறந்ததாகத் தகவல்

நேற்றைய கடல் கொந்தளிப்பு அனர்த்தம் காரணமாக மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்டங்களில் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் நேற்று மாலை வரை 300 உடல்கள் வைக்கப்பட்டிருந்தன. இதில் 115 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காத்தான்குடி பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ள 87 சடலங்களும் நேற்று மாலை அடையாளம் காணப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

### -40 அடிக்கும் மேலாக எழுந்த பேரலை-

## யாழ்.குடாநாட்டில் வடமராட்சியிலும் நூற்றுக் கணக்கானோர் மரணம்!

யாழ். கரையோரப்பகுதியில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கடலில் சுமார் 40 அடி உயரத்திற்கு மேல் எழுந்த அலை கரையோரப் பிரதேச மக்களுக்கு பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தியது. இப் பெருக்கெடுப்பால் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன், பலரைக் காணவில்லை. உயிரிழந்தோரில் சின்னஞ்சிறு பிள்ளைகளே அதிகமாகக் காணப்படுவதோடு காணாமல் போனோரிலும் சிறுவர்களே அடங்குகின்றனர். கடல் வெள்ளப் பெருக்கெடுப்பினால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் பாதிப்புற்றோருக்கு சர்வதேச சமூகம் விரைந்து உதவ வேண்டும்

### (அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் கோரிக்கை)

வடக்கு-கிழக்கில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு விரைவாக உதவுமாறு சர்வதேச சமூகத்திடம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். பல்லாயிரக்கணக்கான மக்கள் இக்கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டிருப்பதுடன் ஆயிரக்கணக்கானோர் பெரிய காயங்களிற்கு உட்பட்டுமுள்ளனர். வடக்கு கிழக்கிலுள்ள சகல மருத்துவ நிறுவனங்களும் காய மடைந்தவர்களால் நிரம்பியுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ள பேரழிவு!

தமிழீழப் பகுதிகளில் திடீர் கடல் கொந்தளிப்புக் காரணமாக நிகழ்ந்த பெரும் இழப்புக்களால் தமிழீழ மக்கள் பெரும் சோகத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

தமிழர் தாயகப் பகுதிகளில் என்றும் நிகழ்ந்திராத வகையில் பெரும் எண்ணிக்கையிலான உயிர்களை கோரமாகக் காவு கொண்டும், பலரைக் காயப்படுத்தியும் உள்ள கடல் கொந்தளிப்பு நிலை மக்களின் அளவிட முடியாத சொத்துக்களை அழித்தும்-கரையோர கிராமங்களையும் முற்றாகவே தரைமட்ட மாக்கியுமுள்ளது. ஏற்கனவே சிறிலங்கா அரசின் போர்ச் சுமைகளுக்குள் வாழ்ந்து நலிந்து போயிருக்கும் இந்த மக்கள் மீது இயற்கையின் தாக்கம் ஏற்படுத்திய பெரும் விளைவுகளால் தமிழீழ மக்கள் அனைவரும் பெரும் சோகமடைந்துள்ளனர்.

(ஜோதி)

## சிறிலங்காவின் தென்பகுதியிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலி!

### அம்பாந்தோட்டை, காலி மாவட்டங்கள் பெரும்பாதிப்பு

தென்பகுதி அம்பாந்தோட்டையில் நேற்று பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. 1000 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

மொறட்டுவைக்கும் மட்டக்குளிக்கும் இடையில் 10பேர் உயிரிழந்துள்ளனர். நீர்கொழும்பில் 200பேரைகாணவில்லையென தெரிவிக்கப்படுகிறது. கற்பிட்டியில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ள போதும் அது பற்றிய விபரம் தெரியவில்லை பாணந்துறை,

(12 ஆம்பக்கம்பார்க்க)

## பெருமளவு படையினரையும் கடலலை காவு கொண்டது!

வடமராட்சியின் கரையோரப் பகுதிகளில் காவல் கடமையிலிருந்த கடற்படையினர் உட்பட மட்டக்களப்பின் கரையோரக் காவலரண்களில் கடமையிலிருந்த பல சிறிலங்கா அரச


(12ஆம்பக்கம்பார்க்க)

# முல்லை, வடமராட்சி கிழக்கில் பேரழிவு















# இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூரை அதிரவைத்த பூகம்பத்தின் பேரழிவுக்காட்சிகள்











## இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூரிலும் பூகம்பம்; கட்டடங்கள் நாசம்; ஏராளமானோர் உயிரிழப்பு!

(ஜகார்த்தா)

**இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக்கில் நேற்றுக் காலை 9மணியளவில் திடீர் பூகம்பம் ஏற்பட்டது. சுமார் 20 வினாடிகள் நீடித்த இந்த பூகம்பத்தினால் கட்டடங்கள், அடுக்குமாடிகள் இடிந்து தரைமட்டமானது.**

வானிலை ஆய்வு மையம் சுமார் 8.1 ரிக்டர் அளவு பூகம்பம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளது. மிக அதிகமான பூகம்பத்தால் தாக்கப்பட்ட இந்தோனேசியா தவிர மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் ரிக்டர் அளவு 6.4 ஆக பதிவாகி உள்ளது. பினாங், கிலாங்தீவு, பாண்டாதீவு, கோலகுமாவே நகரங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தோனேசியா அருகே உள்ள சுமத்திரா தீவிற்கு மேற்கே 1620 கிலோ மீற்றர் தூரத்தில் பூகம்பம் உருவாகியுள்ளது.

கடல் நீருக்கு அடியில் 40 கிலோ மீற்றர் ஆழத்தில் பூகம்பம் மையம் கொண்டு இருந்ததாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

வணிக வளாகக் கட்டடங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புக்கள், வீடுகள் இடிந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கி ஆயிரக்கணக்கானோர் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்தோனேசியாவைச் சுற்றி 17 ஆயிரம் தீவுகள் உள்ளன. பூகம்பத்தால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு ராட்சத அலைகள் உருவானது. கடல் நீர் ஊருக்குள் புகுந்தது. மேலும் பூகம்பத்தால் மின் கம்பங்கள், டெலிபோன் கம்பங்கள் சரிந்தன. இதனால் இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல தீவுகள் தொடர்பு கொள்ள முடியாமல் உள்ளது.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தப்பிக்க வழியில்லாமல் திணறி வருகிறார்கள். தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டதால் பலியானோர் விபரம் உடனடியாகத் தெரியவில்லை. இந்தோனேசியாவில் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். பலரைக் காணவில்லை. கடல் நீரில் சிக்கி பலியாகி விட்டனரா? என்பது பற்றி உறுதி செய்ய முடியாமல் திணறி வருகிறார்கள். இதுவரை 9 பேர் பலியானதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறுகையில்; கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மிக மோசமான பூகம்பம் இது என்று தெரிவித்தனர். அந்தப் பகுதியில் பொலிசாரும், அதிகாரிகளும் குவிந்துள்ளனர். நிலைமையை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

வங்காள தேசத்தில் சிட்டகாங் துறைமுக பகுதிகளிலும் பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.6 புள்ளிகளாக இது பதிவானது அங்கு 1 நிமிடம் 42 வினாடிகளுக்கு இந்த நில நடுக்கம் நீடித்தது. இந்தோனேசியாவில் ஏற்பட்ட பூகம்பத்தால் இதுவரை 8 பேர் பலியானதாக முதல் தகவல் கிடைத்துள்ளது.

## அடுத்தடுத்து நில அதிர்வுகள் வராது வதந்திகளை நம்பாதீர்

### வானிலை அறிவிப்பு மையம் தகவல்

சென்னை மற்றும் தமிழ் நாட்டின் கடலோர மாவட்டங்களில் நேற்று அதிகாலை ஏற்பட்ட நில நடுக்கத்துக்கு ஆயிரக்கணக்கானவர்கள் பலியாகி விட்டனர். மீட்புப்பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

இதற்கிடையே இன்று மீண்டும் லேசான நில அதிர்வு உண்டாகலாம் என்று ஒரு தகவல் பரவியது. இதனால் மக்களிடையே ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. இது பற்றி நுங்கம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரி தெரிவிக்கையில்

இதேபோன்று மீண்டும் ஒரு நில நடுக்கம் வரும் என்று கூறப்படுவது தவறு. அதை முழுமையாக கணிக்க இயலாது. எங்களுக்கு கிடைத்த தகவல்படி மீண்டும் நில அதிர்வு வர வாய்ப்பு இல்லை. எனவே தேவை இல்லாமல் பரப்பிவிடப்படும் வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெற்காசியாவை உலுக்கிய கடல் கொந்தளிப்பு தமிழ் நாட்டிலும் வரலாறு காணாத பேரிழப்பு

இந்தியா, இலங்கை, இந்தோனேசியா உட்பட பல நாடுகளில் பேரழிவை ஏற்படுத்திய பூகம்பம் தென் இந்தியாவில் தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகளில் வரலாறு காணாத அளவுக்கு பேரழிவை ஏற்படுத்தியது. காலை 6.35 மணிக்கு சென்னையில் நில நடுக்கம் ஏற்பட்டது வீடுகள் குலுங்கின. மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள். மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் சென்னை மக்கள் இடையே பீதி ஏற்பட்டது. நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக அடுத்தடுத்து அதிர்வுகள் உண்டாகின. இதனால் இந்திய பெருங்கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. கடல் தண்ணீர் சுமார் 50 மீற்றர் முதல் 100மீற்றர் வரை கொந்தளித்தது.

சென்னை, விசாகப்பட்டினம், நெல்லூர், தூத்துக்குடி துறைமுகங்களில் கடல் தண்ணீர் பல அடி உயரத்துக்கு எழுந்தது. சென்னையில் கல்பாக்கம், எண்ணூர், கண்டையார் பேட்டை, திருவொற்றியூர், காசிமேடு, துறைமுகம், மெரினா கடற்கரை, சாந்தோம், பட்டினம்பாக்கம், எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர், ஈச்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி, கோவளம், பழவேற்காடு பகுதிகளில் கடல் கொந்தளிப்பு கடுமையாக இருந்தது. கடல் தண்ணீர் பல மீற்றர் தூரத்துக்கு ஊருக்குள் புகுந்தது. இதனால் கடலோர பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. கடல் தண்ணீரில் பல்லாயிரக்கணக்கான குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன..

தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்ட இந்தப் பேரழிவில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் பலியாகிவிட்டனர். கடலோர பகுதிகளில் காணாமற் போனவர்களை தேடி உறவினர்கள் அலைவது பரிதாபமாக இருந்தது.. குடிசை வாழ்மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக அங்கும் இங்கும் ஓடினார்கள். கடலோர, குடிசைப் பகுதிகளில் மக்களின் அழுகைக் குரல் கேட்ட வண்ணம் உள்ளது. முழுமையாகத் தண்ணீர் வடிந்த பிறகே கடல் கொந்தளிப்பு எத்தனை உயிர்களைக் காவு கொண்டது என்பது தெரியவரும்.

### நிலநடுக்கம் மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும்

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கம் மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். சாதாரணமாக இது போன்ற மிகப் பெரிய நில நடுக்கம் ஏற்பட்ட 3 அல்லது 4 நாட்களுக்குள் மீண்டும் லேசான அதிர்வுகள் ஏற்படக் கூடும் என்று நிலநடுக்க கணிப்பு மையத்தின் இயக்குநர் ஏகே சுக்லா தெரிவித்தார். சில நேரங்களில் அதன் காலம் நீள்வதற்கும் வாய்ப்புள்ளது என்றார் அவர்.

# கடும் மழையால் சேதமுற்றுள்ள வீதிகளை துரித கதியில் புனரமைக்க நடவடிக்கை

## - கிளி,கரைச்சி பிரதேச சபை தகவல்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகளைத் துரித நடவடிக்கையின் கீழ் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கரைச்சி பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார். இதற்கமைய வீதிகளின் நிலை குறித்த விபரங்கள் கோரப்பட்டுள்ளன.**

தற்போது பெய்த கடும் மழை காரணமாக கரைச்சி பிரதேச எல்லைக்குட்பட்ட வீதிகள் சேதமடைந்துள்ளதன் காரணமாகப் போக்குவரத்துகள் மேற்கொள்வதில் மக்கள் தினம் தினம் பாரிய அசௌகரியங்களை எதிர் கொண்டு வருவதனை முன்னிட்டு மேற்படி வீதிகளைப் பல்வேறு திட்டங்கள் மூலம் விரைவாகப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை கரைச்சி பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி சேதமடைந்துள்ள வீதிகளைப் புனரமைக்கும் முழுப் பொறுப்பும் பிரதேச சபையினுடையதென்பதால் மேற்படி புனரமைப்புப் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கேற்ற வகையில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வீதிகள் புனரமைப்புக் குறித்த சகல விபரங்களையும் தயாரித்து கரைச்சி பிரதேச சபை செயலகத்திற்கு அனுப்பிவைக்கும்படியும், விபரங்கள் திரட்டுவதில் உதவிகள் தேவைப்படுமிடத்து பிரதேச சபை தொழில்நுட்ப உதவியாளரின் உதவியினைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் கரைச்சி பிரதேச சபை செயலர் வெ.குலேந்திரன் தெரிவித்துள்ளார். (சோ)

# நெற்பயிர்களில் நோய்த் தாக்கம் அவதானமாக இருக்க வேண்டுகை

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் அவதானமாக உங்கள் பயிர்களைப் பார்க்குமாறு! முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன் தெரிவித்தார்.

நெற்பயிரில் கபில நிறத்தத்தியின் தாக்கமும், சந்துக்குத்தியின் தாக்கமும் மிக அதிகமாக முல்லை மாவட்டத்தில் காணப்படுகின்றன.

கூடுதலாக சிலாவத்தைக்கிராமத்திலும், உடையார் கட்டு, கைவேலி, வள்ளிபுனம் ஆகிய கிராமங்களில் இதன் தாக்கத்தை அவதானித்த விவசாயப்போதனாசிரியர்கள் அதற்கான தடுக்கும் முறையினை விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஒவ்வொருநாளும் வயலைப் பார்வையிட்டு வயலில் வழமைக்கு மாறான நிலை காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள விவசாயப்போதனாசிரியருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். (20)

# பாடசாலையில் திருட்டு

(முல்லை)

வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் ரூபா 65 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன என அப்பாடசாலை அதிபர் தெரிவித்தார். கடந்த 10ஆம் திகதி ஒலிபெருக்கிச் சாதனங்கள், மின்பிறப்பாக்கி வயர் போன்ற பொருட்களே பாடசாலையிலிருந்து அன்றைய இரவு களவாடப்பட்டுள்ளன. முள்ளியவளை, முல்லைத்தீவு காவல் பணிமனையினர் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (20)

# 100 வீடுகள் அமைக்கும் திட்டம் நிறைவு

## 2005இல் 316 வீடுகள் அமைக்க நிதி வழங்கல்

(முல்லை)

உலக வங்கியின் வீட்டுத் திட்டத்தில் முல்லை மாவட்டத்தில் 2004ஆம்ஆண்டு 100வீடுகளுக்கான நிதி வழங்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் கரைதுறைப்பற்றில் 50 வீடுகளும் மாந்தை கிழக்கில் 25 வீடுகளும் ஒட்டுசுட்டானில் 25 வீடுகளும் அமைக்கப்பட்டன. இதன் வேலைகள் தற்போது முடிவடைந்துள்ள நிலையில்,

2005ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 316வீடுகளுக்கான நிதியை உலக வங்கி வழங்கியுள்ளது. இதன் கட்டுமானப் பணியினையும் மக்களின் பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொள்ளவுள்ளது.

இதில் துணுக்காய்ப் பிரதேசத்தில் கோட்டை கட்டிய குளக்கிராமத்தில் 30 வீடுகளும், தேறாங்கண்டலில் 20 வீடுகளுமாக 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பூவரசங்குளம் கிராமத்தில் 36வீடுகளும், கரும்புள்ளியானில் 30 வீடுகளும் மொத்தமாக 66வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒதியமலையில் 35வீடுகளும் பெரியகுளத்தில் 15வீடுகளுமாக மொத்தமாக 50வீடுகளும்,

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் கள்ளப்பாட்டுக் கிராமத்தில் 45வீடுகளும், ஆறுமுகத்தான் கிராமத்தில் 20வீடுகளும், புலக்குடியிருப்பில் 20 வீடுகளுமாக மொத்தமாக 85 வீடுகளும்,

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் குரவில் கிராமத்தில் 26வீடுகளும், வேணாவில் கிராமத்தில் 15வீடுகளும்,வசந்தபுரத்தில் 24 வீடுகளுமாகமொத்தமாக65வீடுகள் அமைக்கப்படவுள்ளன எனமுல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. இக்கிராமங்களை அந்தந்தப் பிரதேச உதவி அரச அதிபர்கள் தெரிவுசெய்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# மழைநீரைச் சேகரித்து குடிநீராக்கத் திட்டம்

## - கிளிநொச்சியில் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

றீடோ நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையத்தினால் மழைநீரினைக் குடிநீர் ஆக்குவது தொடர்பான கருத்தரங்கு கடந்த வியாழனன்று கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் நடைபெற்றது.

இணையத்தலைவர் கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், மேலதிக அரசஅதிபர் நா.வேதநாயகன், இலங்கை மழைநீர் சேகரிப்புஅமைய பணிப்பாளர் செல்வி தனுஜா ஆரியகந்த, இணைப்பாளர் சுஜித்சிரோமன் வெளிக்கள அலுவலர் உருத்திரா , விஜேந்திரன், றீடோ நிறுவன உதவிப் பணிப்பாளர் சீலன் ஆகியோர் கலந்து கொண்டு மழைநீர் சேகரிப்பு மற்றும் அதன் பயன்பாட்டுமுறை குறித்துக் கருத்துரை வழங்கினர்.

மேற்படி கருத்தரங்கில் கிளிநொச்சி, கண்டாவளை, பூநகரி பச்சிலைப்பள்ளி-பளைப் பிரதேச செயலர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்திணைக்களப் பிரதிநிதிகள் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

கிளி.மாவட்டத்தில் உவர்நீர் மற்றும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேச செயலர் பிரிவு ஒவ்வொன்றிற்கும் 8000 லீற்றர் கொள்வனவுடைய சீமெந்தாலான மூன்று கொள்கலன் வீதம் 12 கொள்கலன்களை இலங்கை மழை சேகரிப்பு அமையம் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# அனுமதியின்றி மணல் ஏற்றினால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப்பிரதேசத்தில் கரைச்சி பிரதேசசபையின் அனுமதியின்றி மணல் ஏற்றுபவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், தற்றப்பணமும் அறவிடப்படவுள்ளதாக கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 2005ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதி முதல் கரைச்சிப்பிரதேச சபையினரின் அனுமதிபெறாது மணல் ஏற்றுவோர் மீது மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதெனவும் அதன் பிரகாரம்மேற்படி நடவடிக்கையினை உதாசீனம் செய்யும் வாகன உரிமையாளர்களிடம் ரூபா 5000 குற்றப்பணமாக அறவிடப்படுவதுடன் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்படுவர் என விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சோ)

# முன்பள்ளி கல்வியை நிறைவுசெய்த சிறார்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப் பணியினரால் நிர்வகிக்கப்பெறும் பூங்காக்களின் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த சிறார்களின் கௌரவிப்பு நிகழ்வு கடந்த புதன் கிழமை அன்று முல்லைத்தீவு மாவட்ட விசுவமடு பிரதேச சோழர் பூங்காவில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றி வைக்க, மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பணிப்பாளர் வின்சன், தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழஅரசியல்



துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பொறுப்பாளர் வின்சன், சிறுவர் கல்வி ஊட்டமேம்பாட்டுப் பணி கொடியினை பொருண்மிய மேம்பாட்டுநிறுவன துணைப்பொறுப்பாளர் மதன்ராஜ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து சிறுவர் பூங்காக்களின் பணிப்பாளரும்,



ஊரகவளர்ச்சிப் பணிப்பொறுப்பாளருமான கந்தம்மான் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வரவேற்புரையினை சோழர்பூங்கா நிர்வாகி இசை ஞானவதி நிகழ்த்தினார். அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் சிறுவர் பூங்காக்களின் இணைப்பாளர் சிறீக்குமாரும் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளித்திட்ட இணைப்பாளர் கணேசலிங்கமும் சிறப்புரைகளை வழங்கினர்.

அரசியல்துறையின் நிதியுதவியுடன் சோழர், கலைமகள், சொக்கலிங்கம் பூங்கா சிறார்களின் பெயர்களில் ரூபா.1000 வீதம் சிறார் சேமிப்புக் கணக்கு திறக்கப்பெற்று அதற்கான வைப்புப் புத்தகங்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியில் சிறுவர்களுக்கான புத்தகக்கோவைகளும் ஏனைய பாடசாலை உபகரணங்களும் அரசியல்துறை துணைப் பொறுப்பாளரால் சிறார்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

தொடர்ந்து பூங்கா சிறார்களின் கலை நிகழ்வு , ஆசிரியர்கள், பணியாளர்களின் கலைநிகழ்வும் நடைபெற்றன. நன்றி உரையினை சொக்கலிங்கம் பூங்கா நிர்வாகி நிலாமதி நிகழ்த்தினார். இந் நிகழ்வுகளில் சிறார்களின் பெற்றோர், நலன் விரும்பிகள் எனப்பலர்கலந்து சிறப்பித்தமைகுறிப்பிடத்தக்கது.(சோ)

# கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.ச புதியநெறியாளர் குழு தெரிவு

(வட்டக்கச்சி)

கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் புதிய நெறியாளர் தெரிவு கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் முதன்மைக் கட்டடத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமையில் இடம் பெற்றது. புதிய தலைவர் க.முத்துக்குமாரு, உபதலைவர் பெ.இராமச்சந்திரன், நெறியாளர்களாக த.ரமணன், நா.இராசசேகரம், க.தர்மசூரியர், சொ.இராசேந்திரம், செல்வி.க.தனலட்சுமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிர்வாகத் தெரிவுக்கு கூட்டுறவுப் பரிசோதகர் நிர்வாகசபை கூட்டுவுப் பொறுப்பாளர் மற்றும் பலதரப்பட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (12)

# பிரதேச அபிவிருத்தி குறித்து ஆராய்வு

(முல்லைத்தீவு)


அக்கராயன் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ப.சபாரட்ணம் தலைமையில் ஸ்கந்தபுரம் இல.01அ.த.க பாடசாலையில் நடைபெற்றது. இதில் கல்வி அபிவிருத்தி, விவசாயச் செயற்பாடுகள், போக்குவரத்து வசதி, மருத்துவ வசதிகள், சமூக ஒன்றிணைவு செயற்பாடுகள் தொடர் பாக ஆராயப்பட்டு திட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டன. இந்த நிகழ்வில் அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன், அன்புமாறன், கிராம மக்கள்-பிரதிநிதிகள் பொது அமைப்புப் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார்கள். (20)

# வடமராட்சியில் பேரலைகள் நிகழ்த்திய அனர்த்தம்!



















படங்கள் : காங்கேயன், தயா

# சுயநலத்திற்காக பகடைக்காயாகும் சிறிலங்காவின் நீதித்துறை!

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவு நோக்கி அண்மிக்கும் வேளையில், அவர் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வந்து பிரதமராகப் பதவி ஏற்று அரசியலில் நீடிக்க வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார். சந்திரிகா எவ்வித சட்ட,நீதி விதிமுறைகளுக்கமைவாகச் செயற்படுவதாகத் தெரியவில்லை. காரணம் நாட்டின் பாது காப்பைக் கருதி ரணில் அரசாங்கத்தில் 3 அமைச்சுப் பதவ"களைப் பறித்தார். இது அவருக்கு நிறைவேற்று சனா திபதி அதிகாரம் கிடைத்திருப்பதாலாகும். எனினும் அதனை அறி முகப்படுத்திய ஜே.ஆரையே நீதித்துறை ஆட்டிப்படைத்து நீதிவழுவாமல் செயற்பட்டது. இந்த வகையில் சந் திரிக ாவின் அராஜக நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் துணிவு தற்போதைய உயர்நீதிமன்றுக்கு இருக்கின்றதா என்பது பற்றி கட்டுரையாளர் ஆராய்ந்துள்ளார்.**

உப்புள்ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
தமிழில்—வடிவேல்

**1970-77** சிறிலங்கா சுதந்திரக் கூட்டணி ஆட்சியின்போது நீதிமன்றம் விசேடமாக உயர்நீதிமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையில் நீண்ட மோதல்கள் நடந்தன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சியினால் சிறிமாவோவின் அரசாங்கம் பெரும் விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாகியது. குறிப்பாக அப்போதைய நீதியமைச்சராகவிருந்த பீளிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க மீதே கண்டனங்கள் எழுந்தன. நீதிமன்ற நிபுணரின் மகனாகவும், நீதிச்சேவையின் திணைக்களத்துடன் நீண்ட காலத் தொடர்புடைய குடும்பத்தின் ஒரு அங்கத்தவராக இருந்த அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது நீதிமன்றத்தின்தரத்தை வேண்டுமென்றே குறைத்துக் கொண்டமையாகும். உண்மையில் 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி சுயாதீனமாக இயங்கிய நீதிமன்றங்களை கட்டளைக்குப் பணிந்துபோகும் ஒரு நிறுவனமாக மாற்றியமைத்தமையே அவர் இழைத்த குற்றமாகும். சில நியமனங்கள் கட்சி சார்பானதாக இருந்ததாலும், சிலர் கட்சி சார்பாக நடந்து கொண்டதாலும் நீதிச்சேவை எதிர்க்கட்சிகளினதும், பொது மக்களினதும் விமர்சனங்களுக்குட்பட்டது. ஜே.ஆரின் சரிதம் பற்றிய நூலில் நிறைவேற்றதிகார சனாதிபதி முறையின் கீழ் நீதிமன்றம் துணிவுடன் எந்தத் தீர்ப்பையும்



வழங்க முடியும் என்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இது பற்றித் தற்போது சிந்திப்பது பொருத்தமானதாக இருக்கும்.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா முன்னாள் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியின் மகன் என்ற வகையில் பதவிக்கு வந்தது முதல் நோக்கியதாவது 1970-77 காலப்பகுதிகளில் கட்சி சார்பாக எந்த நீதிபதி செயற்பட்டார் என்பதையே. அவ்வாறு காணப்பட்டவர்களை அவர் தந்திரமாக ஓய்வில் அனுப்பவும் தவறவில்லை. அதற்காக அவர் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும்போதே நீதிபதிகளின் எண்ணிக்கையையும் குறைத்து நீதிமன்றத்தின் உயர் பதவிகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார். அதன்படி அரசியலமைப்புத்திட்டம் நிறை வேற்றப்பட்டதும் உடனடியாக சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தில் கட்சிக்கு சார்பாக செயலாற்றிய நீதிபதிகளைப் பதவிவிலக்கி, அவர்களைக் கௌரவமான முறையில் ஓய் வில் செல்லப்பணித்தார். அத்துடன் நில்லா மல் நெவில் சமரக்கோன் என்ற பெயர் பெற்ற சட்டத்தரணிக்கு தலைமை நீதிபதியாகப் பதவி வழங்கினார்.

அதனையடுத்து தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் செயலில் இறங்கினார். அதன்படி சிறிமாவோவின் குடியுரிமையைப் பறிக்கத் திட்டமிட்டார். அதற்காக சிறிமாவோவுக்கு ஆதரவு வழங்கிய லங்கா சமசமாஜக் கட்சியினர் சுமத்திய குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென சனாதிபதி ஆணைக்குழுவை உருவாக்கினார். ஆயினும் சிறிமாவோ ஆணைக்குழு முன் விசாரணைக்குச் செல்லாது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சென்று சனாதிபதி ஆணைக்குழு சட்டவிரோதமானதாகவும், அதனைத் தடைசெய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரினார். அவர் அவ்வாறு கோரியது பாராளுமன்றில் ஆறில் ஐந்து பெரும்பான்மை ஆதரவு பலத்தைப் பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்ட சனாதிபதியின் ஆணைக்குழுவுக்கு எதிராகவே.


அவரின் கோரிக்கை நிறைவேற்று அதிகார சனாதிபதியின் முன் நீதிமன்றின் தற்துணிவை பரீட்சித்துப்பார்க்கவே சமர்ப்பிக்கப்பட்டது. அதற்குக் காரணம் ஜே.ஆரின் அரசியல் வாதக்களையெடுப்புகளுக்கு நீதிமன்றம் துணைபோகிறதா என்பதை சிறிமாவோ அறிவதற்காகும். ஜே.ஆர் பதவிக்கு வந்த புதிது அவருக்கு ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மை

இருந்தது சிறிமாவோவும் அவரது அரசியலும் இல்லாது ஒழிந்த காலம் ஜே.ஆர் தமக்கென நீதிமன்ற அமைப்பை மாற்றியிருந்தார். அதே போன்று தமக்கு வேண்டிய ஒருவரையே உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவியில் அமர்த்தியிருந்தார். இந்நிலையில் சனாதிபதி ஆணைக்குழுவைத் தடை செய்யும் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரும் சிறிமாவோவின் மனு மீதான வழக்கு நிராகரிக்கப்பட்டு செல்லுபடியற்றதாகிவிடும் என்றே அனைவரும் கருதினர். ஆயினும் எதிர்பாராத வகையில் சிறிமாவோவுக்கு சார்பாக சனாதிபதி ஆணைக்குழு மீது தடையுத்தரவு வழங்கப்பட்டது.இதன் மூலம் சிறிலங்காவின் கட்சிக்காரர்கள் வெற்றிபெற்றனர். ஊடகங்களும் ஜே.ஆரின் பழிவாங்கலுக்குக் கிடைத்த பதிலடி என்று வர்ணித்தன. அத்துடன் ஜே.ஆருக்கு ஒரு 'பின்னடைவு என்றும் தெரிவித்தன. அத்துடன் நாட்டின நிறைவேற்று அதிகார சனாதிபதியாக இருந்தபோதிலும், ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையைப் பெற்றிருந்தபோதும், தனக்குச் சார்பான நீதிபதிகளை நியமித்திருந்தபோதும், நீதிக்கு முன்னால் எதுசரி எதுபிழை என்பதைத் தெரிந்து சரியான தீர்ப்பை வழங்க நீதிமன்றுக்குத் துணிவு இருப்பதை நிருபித்துள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவித்தன. சுருக்கமாகக் கூறினால் ஜே.ஆரின் இலாபத்திற்கேற்ப வியாபாரங்கள் செய்வதற்கு நீதிமன்றங்கள் தயாரில்லை என்பதாகும். தனது அரசியல் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் நீதிமன்றம் ஒத்துழைப்பு வழங்கும் என்ற ஜே.ஆரின் நம்பிக்கை கைவிடப்பட்டது.

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இதனோடு நின்று விடவில்லை. 1983ஆம் ஆண்டு நடைபெறவிருந்த சனாதிபதித் தேர்தலை 1982 ஆம் ஆண்டில் நடத்த ஜே.ஆர் திட்டமிட்டதையும் உயர்நீதிமன்றம் தடை விதித்தது.

அவர் 1982ஆம் ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்ட உட்பூசலைக் கருத்திற்கொண்ட 1982ஆம் ஆண்டு சனாதிபதித்தேர்தல் நடத்தி வெற்றி பெறலாம் என்ற எண்ணத்தில் இருந்தார். ஆயினும் அதற்கும் தடை விதிக்கப்பட்டதும் அவ்வாறு முன் கூட்டித் தேர்தலை நடத்துவதாயின் அரசியலமைப்புச் சட்டத்தின் 30 (2) உம் பந்தியை மாற்றியமைத்தல் வேண்டும்.

அதனை சர்வசன வாக்கெடுப்பின் மூலம் மாற்ற முடியாது போனதால் பாராளுமன்றில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையுடன் மாற்றுவதற்கு உயர்நீதிமன் றத்தின் அனுமதி தேவைப்பட்டது. இந்த அனுமதி வழங்கும் விடயத்தில் நீதி மன்றத்திலேயே முரண்பாடுகள் தோன்றின. உயர் நீதி மன்ற நீதிபதிகளில் நான்குபேர் இதில் சர்வசன வாக் கெடுப்பு அவசியம் இல்லை என்றும் மூன்று பேர் அவசியம் என்றும் வாதிட்டனர். இந்த நிலையில் ஒருவாக்கினால் ஜெயவர்த்தனா வெற்றி பெற்று சர்வசன வாக்கெடுப்பைத் தவிர்த்துக் கொண்டார்.



அதன் பின்னர் பொதுத்தேர்தலை நடத்துவதற்குப் பதிலாக சர்வசனவாக்கெடுப்பை நடத்த முயன்று அரசியலமைப்பில் நான்காவது சரத்தை மாற்ற எண்ணினார். இந்த முறையும் அதி உயர் நீதிமன்றம் வரை சென்றது. எனினும் அப்போதும் நீதிபதிகள் முரண்பட்டு இரு பிரிவுகளாகினர். இதுபற்றி அப்போதைய எதிக்கட்சி உறுப்பினராக இருந்த லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றில் தெரிவாகும்போது இதற்கும் ஏழு நீதிபதிகள் இருந்திருப்பின் மூன்று பேர் எதிராகவும், நான்கு பேர் ஆதரவாகவும் வாக்களித்திருப்பர் என்று கூறினர். எனினும் இந்தப் பிரேரணை மீது எதிராகவே பிரதம நீதியரசர் தீர்ப்பு வழங்கினர். இந்த வகையில் தீர்ப்பு வழங்கியதால் நெவில் சமரக்கோன் பதவி விலக்கப்பட்டார். ஜே.ஆர் தம்மீது மிகவும் நம்பிக்கை வைத்திருந்தபோதும், நீதித்துறைக்கு மாசுபடாத வகையிலும், தனது பதவியைக் கருத்திற்கொண்டு அவர் மேற்படி தீர்ப்பை வழங்கத் தயக்கம் காட்டவில்லை. நெவில் சமரக்கோன் திறமைமிக்க உயர் நீதிமன்ற நீதியரசராக அன்று திகழ்ந்தார். பல சந்தர்ப்பங்களில் ஜே.ஆரின் அரசாங்கத்தை அவர் எச்சரித்தும் இருந்தார்.

அத்துடன் ஜே.ஆர் அப்போது இந்த நாட்டை அழிவுக்குக் கொண்டு போகிறார் என்று எதிர்க்கட்சிகள் கோஷமிட்டபோதும், நீதித்துறையில் அவருக்கு எதுவித களங்கமும் ஏற்பட இடமளிக்காதவாறு நெவில் சமரக்கோன் பணியாற்றிச் சென்றார்.

அந்தவகையில் நாட்டின் சிறந்த நிர்வாகி என்று ஜெயவர்த்தனவை அன்றி நெவில் சமரக்கோனையே குறிப்பிடலாம்.

குறிப்பாக மூன்றாம் உலகநாடுகளில் அரசுத் தலைவர்கள் ஆட்சியின்போது பல குற்றச்சாட்டுக்கள் எழலாம். அவற்றினுள் முக்கியமாக உயர் நீதிமன்றத்துடன் கையாடல் என்ற குற்றம் ஏற்படலாம். எல்லா வகைத் தவறுகளுக்கும் பொதுமக்களே தேர்தலின் போது தீர்ப்பு வழங்குபவராயினும் உயர்நீதி மன்றத்தை ஊழலுக்குக் இட்டுச் செல்லும் தலைவர்களையும் அதற்குத் துணைபோகும் நீதிமன்றங்களையும் பொது மக்களன்றி நீதிதேவதையே தண்டிக்கும் நீதியைக் கைக்கொள்ளும் நீதிமன்றம் நீதிதேவதையின் ஆலயமாகும்.

◆ ◆ ◆

## மோசடியில் ஈடுபட்ட சுவிஸ்வர்த்தகர் இலங்கையில் நடமாடுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

சுவிற்சர்லாந்தில் பெருந்தொகைப் பணத்தை கையாடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட சுவிஸ் வர்த்தகர் ஒருவர் தற்பொழுது இலங்கைக்குள் பிரவேசித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந் நபர் கடைசியாக நீர் கொழும்பில் காணப்பட்டுள்ளார் என்றும் கடந்த 6 மாதங்களாக இவர் இலங்கையில் தங்கியுள்ளார். சுவிற்சர்லாந் தைச்சேர்ந்த பெரும் வர்த்தகப்புள்ளியான இந்நபர் நடத்திவந்த பல நிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன.

இவரது கடவுச்சீட்டை செல்லுபடியற்றது; என சுவிற்சர்லாந்து அதி காரிகள் பிரகடனம் செய்துள்ளார்கள்.

## யாழ்.உ.உ.ஆ.அலுவலகத்திற்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் நீண்டகாலமாக அடிப்படைவசதிகள் ஏதும் அற்ற தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருகிறது.

அலுவலகப் பயன்பாட்டிற்குப் போதுமான இடவசதி, தள பாடவசதி, ஆளணி என்பன அற்ற நிலையில் இவ் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் இருந்து வருவதனால் இப் பணியகத் தினால் மக்களுக்கான திருப்திகரமான சேவைகளை வழங்கமுடி யாதுள்ளது.

இதனைக் கவனத்திற்கொண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடம் ஒன்றை யாழ். பண்ணைப் பகுதியில் அமைத்துக் கொடுக்க நிகொட் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கடந்த வாரத்தில்
## 16.12.2004-22.12.2004

**16**

* ஈராக் தலைநகர் பாக்தாத்தின் மத்திய பகுதியில் கிளர்ச்சிவாதிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்நாட்டுத் தகவல்தொடர்பு அமைச் சகத்தைச்சேர்ந்த முக்கிய உயர் அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

* துருக்கிப் பிரதமர் தயிப்எடோகான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் நெதர்லாந்துப் பிரதமர் ஜோன்பீற்றருடன் அவ்வ மைப்பில் இணைவது குறித்து பேச்சுக் களை நடத்தியுள்ளார்.



இணைப்பில் மகிழ்வு

**17**

* பலஸ்தீனத்தின் தெற்கு காஸாவில் உள்ள கான்யூனிஸ்ட் அகதி முகாம்மீது இஸ்ரேலியப்படையினர் நடத்திய தாக்கு தலில் 5 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்; 15பேர் காயமடைந்தனர்.



இஸ்ரேலியப் படையினர்

*. கண்டங்களுக்கிடையிலான ஏவுகணைப்பாதுகாப்பு முறையை உருவாக்கும் விடயத்தில் ஒத்துழைப்பது குறித்த ஒப்பந்தத்தில் ஜப்பானும் அமெரிக் காவும் கைச்சாத்திட்டன.

**18**

* பாகிஸ்தான் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 55 இந்திய மீனவர்களைப் பாகிஸ்தான் அதிகாரிகள் கைதுசெய்தனர்.

**19**

* ஈராக்கில் முஸ்லிம்களின் இருபுனித நகரான கர்பலாவிலும், நயாப்பிலும் இடம் பெற்ற இருவேறு கார்க்குண்டு வெடிப்புக் களில் 66 பேர் கொல்லப்பட்டனர்; 120 பேர் காயமடைந்தனர்.



குண்டுவெடிப்பின் கோரம்

* ஆப்கானிஸ்தானின் காந்த கார் அருகே உள்ள மேவந்த மாவட்டத்தில் சந்தைப்பகுதி அருகே ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த ஆப்கானிஸ்தான் பொலிசார் மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் 4 ஆப்கான் பொலிசார் பலி.

*

சீனாவின் மேற்கு மாகாணமான சிச்சுவானில் இடம்பெற்ற சீன சுரங்க வெடிவிபத்தில் 14 தொழிலாளர்கள் பலி.

*

சங்கரராமன் கொலை சூத்திரதாரியின் முக்கிய குற்றவாளி அப்பு கைது.

*

பாகிஸ்தானின் இராணுவத் தளபதியாக தான் தொடர்ந்தும் இருப்பது என்ற சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பின் முடிவை ஆட்சேபித்து ராவல்பிண்டி நகரில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



முஷரப் எதிர்ப்பாளர்

*

இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தா உட்பட சில நகரங்களில் விண் கற்கள் பாரிய சத்தத்துடன் விழுந்தன.

**20**

* மலேசியப் பிரதமர் அப்துல்லா அகமது பதாவி 5நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இந்தியா விஜயம்.

*

ஸ்பெயினின் தென்பகுதியில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் பிரித்தானிய தம்பதிகள் இருவர் உட்பட 3 பேர் பலி.

*

ஈராக்கின் சமராவில் இடம்பெற்ற பலவேறு தாக்குதல்களில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

**21**

*

ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் விஜயம்.



ஈராக்கில் ரொனிபிளேயர்

*

ஈராக்கில் இடம்பெற்ற அமெரிக்க இராணுவத்தளம் மீதான கிளர்ச்சித் தாக்குதலில் 19 அமெரிக்க சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் 72 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



அமெரிக்க தளம்பகுதி

*

சூடான் அரசுக்கும் டார்பூர் பிராந்திய தீவிரவாதிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் முறிவடைந்தன.

**22**

* இஸ்ரேல்-பலஸ்தீனத்தலைவர்களோடு பிரிட்டன் பிரதமர்பிளேயர் பேச்சு பலஸ்தீன முன்னாள் தலைவர் யசீர் அரபாத்தின் மறைவிற்குப்பின்னர் சர்வதேச மட்டத்தில் மத்திய கிழக்குப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் ரொனிபிளேயர் ஈடுபட்டுள்ளார்.

# உணவகங்கள் மற்றும் தேநீர்ச்சாலைகளில் சுகாதாரத்தைப் பேண வலியுறுத்து

(வடமராட்சிகிழக்கு)

சுகாதார விழிப்புணர்வு தொடர்பாக பச்சிலைப்பள்ளியளை உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்கு உட்பட்ட உணவகங்கள் தேநீர்ச்சாலைகள் உரிமையாளர்கள், பணியாளருக்கான கலந்துரையாடல் கடந்த வெள்ளியன்று பி.ப 2.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பொதுநூலகத்தில் பளை பிரதேசசபையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் பிரதேச சபையைச் சேர்ந்த பணியாளர் முரளிதரன் தலைமையின் கீழ் தமிழீழ சுகாதார சேவையின் பளை வடமராட்சி கிழக்குபிரதேச இணைப்பாளர் ஜெயவரதன், பளைபிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் வே.ராஜதுரை ஆகியோர் சுகாதாரம் சம்பந்தமான கருத்துக்களை வழங்கினர். இதில் தமிழீழ சுகாதாரசேவை இணைப்பாளர் தன்நபர் சுகாதாரம், கட்டட அமைவிடம், உணவகங்கள், சம்பந்தமான கருத்துரைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து பளை பிரதேசசுகாதார பொதுசுகாதார பரிசோதகர் குடி நீர் பாவனை, உபகரணங்கள் தூய்மை பேணுதல், திண்ம, திரவ கழிவுப்பொருட்களை பரவல்களில் போடுதல் மற்றும் ஏனையவிடயங்கள் தொடர்பாக கருத்துக்கள் வழங்கினார்.

அவர் தனது உரையில் 2005 ஆம்ஆண்டு உணவகங்கள் யாவும் கிணறு, பணியாளர் ஓய்வறைகள், மலசலகூடம், கட்டடங்கள் மட்டும் உள்ள உணவகங்கள் 2005 ஆம் ஆண்டு மட்டும் திறக் கலாம் எனவும் இவை தவிர்ந்த ஏனைய உணவகங்கள் யாவும் தேநீர் கடைகளாக தம்மால் அனுமதி வழங்க முடியும். தற்காலிகமாக இயங்கும் உணவகங்கள் யாவும் அனுமதி மறுக்கப்படும் எனவும் கூறினார். இக் கலந்துரை யாடலின் போது 20 இற்கும் மேற்பட்ட உணவகங்கள், தேநீர்கடை உரிமையாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

# வெள்ள நிவாரண அரிசியை மோசடி செய்தோர் கைது

திருகோணமலை மற்றும் கிண்ணியா பகுதியில் வெள்ள நிவாரணங்களுக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 1000 கிலோ கிராம் அரிசி தனியார் அரிசி ஆலையில் இருந்து தம்பலகாமம் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது. முள்ளிப்பொத்தானை பகுதியில் இருந்தே இந்த அரிசி மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நால்வர்கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

# பாண்டியன்குளம் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தமர்வு

பாண்டியன்குளம் அரசியல்துறை செயலகத்தின் கடந்த 17 ஆம் திகதி பிரதேச மாதர்சங்க உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு இடம் பெற்றது. இதில் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் இலக்கியன் சமகாலஅரசியல் நிலைமைகள் குறித்துக் கருத்துரை வழங்கினார்.

அதேபோல் 18ஆம்திகதி பாண்டியன்குளம் அரசியல்செயல கத்தின் பாண்டியன்குளம் பிரதேசத்திற்குட்பட்ட கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான சமகால அரசியல் சம்பந்தமான கருத்துரை வழங்கப்பட்டது. இதனை முல்லை மாவட்டத்தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் இலக்கியன் வழங்கினார்.

மேலும் 18ஆம் திகதி பாண்டியன்குள அரசியல் செயலகத்தின் பிரதேசகிராம அபிவிருத்திச் சங்க சகல உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு இடம்பெற்றது. இக்கருத்துரையினை முல்லை மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் இலக்கியன் வழங்கினார். 19 ஆம் திகதி சகல சமக சுர அமைப்புக்களுக்கும் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கருத்துரையினை இலக்கியன் வழங்கினார். 22 ஆம் திகதி வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்கள மண்டபத்தில் சமகால அரசியல் சம்பந்தமான கருத்துரைகளும், திட்டம் சம்பந்தமான கருத்துரைகளும் இடம்பெற்றன. சமகால அரசியல்நிலவரம் குறித்த கருத்துரையினை முல்லை மாவட்ட தேசியஎழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் வழங்கினார். இதே வேளை இன்றுகாலை 10.00 மணிக்கு பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு இடம் பெற இருப்பதால் இந் நிகழ்வில் பாண்டியன்குளபிரதேசத்திற்குட்பட்ட அனைத்து தேசிய எழுச்சி பேரவை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## மக்களுக்கு உதவி

புதுக்குடியிருப்பில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 206 குடும்பங்களுக்கு பாஜ் நிறுவனம் உணவற்ற பொருட்களை புதுக்குடியிருப்பு உதவிஅரசஅதிபர் பணிமனையில்வைத்து அன்னையில் வழங்கியது.

8576 குடும்பங்கள் முற்று முழுதாக புதுக்குடியிருப்பில் பாதிக்கப்பட்டிருந்தது. 4437 குடும்பங்களுக்கு வீடு முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டிருந்தது என உதவி அரசாங்க அதிபர் தயானந்தா தெரிவித்தார். (20)

### -கடந்த 25 வருடங்களாக-
# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஆளணித் தேவைகள் அதிகரிக்கப்படவில்லை!

(மட்டக்களப்பு)

கடந்த 25வருடங்களாக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் ஆளணிகள் அதிகரிக்கப்படவில்லை எனக் குறை கூறப்படுகிறது.

மொத்தமாக 1520 பேர் கடமையாற்றவேண்டிய இங்கு பல வருடங்களாக 900 பேரே கடமையாற்றி வருகின்றனர். வைத்தியசாலையின் பௌதிக வளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. என்ற போதிலும் இயலபு வாழ்க்கையை அடுத்து நோயாளிகளின் அதிகரிப்புக்கு ஏற்ப ஆளணிகள் அதிகரிக்கப்படவில்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் எம்.தேவராஜன் தெரிவித்தார். அப்பாறை வைத்தியசாலையில் 300 கட்டில்களுக்கு 415 தாதிகள் பணிபுரிகின்றனர் எனினும் மட்டக்களப்பு வைத்திய சாலையில் 700 கட்டில்களுக்கு 285 தாதியரே பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மிகப் பெரிய வைத்தியசாலை மட்டக்களப்பு வைத்தியசாலை என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் (வ.து)

# பதவி வெற்றிடம்

கீழ்க்குறிப்பிடப்படும் சாரதி பதவிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்த வசிப்பிடமாகக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களை தயாரித்து எதிர்வரும் 2005.01.08ஆம் திகதிக்கு முன் "தலைவர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம், புதுக்குடியிருப்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பதவி:- சாரதி (தற்காலிகம்)**

சம்பள குறியீட்டு இல:- 312/13

சம்பள அளவுத்திட்டம்:- 4000-75X10-80X10-5550/=
அத்துடன் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் சம்பள அதிகரிப்பும் உண்டு.

தகுதிகாண் காலம்:- 6மாதங்கள்:-

தகைமைகள்:-

01. 05ஆம் வகுப்பு சித்தியுடன் பஸ், லொறி,உழவு இயந்திரம் பெட்டியுடன் செலுத்துவதற்கேற்ப சாரதி அனுமதிப்பத்திரம் அத்துடன் 04 வருட அனுபவம்.
02. வயதெல்லை 30ற்கும் 45வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. கொழும்பு சென்று வரக்கூடிய வாகனம் செலுத்துவதற்கேற்ப அனுபவம்.

தலைவர்
மு/புதுக்குடியிருப்பு
ப.நோ.கூ. சங்கம் (வ.து)
புதுக்குடியிருப்பு.

(சி-10533)


# ரயில் மோதி யானை பலி
## இரு யானைகள் நிலை கவலைக்கிடம்

கல்கமுவ மீகா சந்தியில் ரயிலில் மோதுண்ட இரண்டு காட்டுயானைகளின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மோதுண்ட மேலும் ஒரு யானை அந்த இடத்திலேயே உயிரிழந்தது. குறிப்பிட்ட இடத்தில் பயணிக்கும் போது ரயில்வேகத்தைக் குறைத்து செல்லுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளபோதும் வேகம் அதிகரித்ததன் காரணமாகவே யானைகள் மோதுண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காட்டு யானைகள் இவ்வாறு பலியாவதைத் தடுப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளபோதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என சுற்றாடல் வளத்துறை அமைச்சர் ஏ. எச் எம். பௌசி தெரிவித்துள்ளார்.

## இரவு காவற்கடமை

(முல்லை)

முல்லைத்தீவு நகரில் இரவு நேரக் காவற்பணிகளில் காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு உறுதுணையாக முல்லைத்தீவு வர்த்தக சங்கப் பணியாளர்கள்,உரிமையாளர்கள் இரவுகாவற்கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (20)


# முக்கிய அறிவித்தல்

## வருடாந்த பொதுக்கூட்டம்-2004

எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால், மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும். நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

தலைவர்
கி.பாஸ்கரன்
வ.பி.பா.ஊ.சவ.சங்கம்
பரந்தன்.

செயலாளர்
க.சி.மணியம்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

(சி.10993)



# SRILANKA RED CROSS SOCIETY



Kilinochchi District Branch
COMPUTER TRANING PROGRAM - 2005
கணனிப் பயிற்சித்திட்டம்-2005
Tel:021-2285843



SRI LANKA RED CROSS SOCIETY

**COURSE-01**
**Junior Diploma In Computer Science**
@ Introduction To Fundamentals
@ Microsoft Word-2002-Xp
@ Microsoft PowerPoint-2002-Xp
@ Microsoft Excel-2002-Xp
(Duration-03 ,Months

**COURSE-02**
**Diploma In Office Management**
@ Introduction To Fundamentals
@ Microsoft Word-2002-Xp
@ Microsoft PowerPoint-2002-Xp
@ Microsoft Excel-2002-Xp
@Microsoft Access-2002-Xp
@Microsoft Windows 2002 Xp
(Duration-05 ,Months

**COURSE-03**
**Diploma In Multimedia Graphics**
@Introduction To Fundamentals
@Micromedia Flash
@Gif Animator(Ver-4.0)
@Cool 3D
@Swish(Ver-2.0)
@Photoshop(Ver-7.0)
@Photo Express
(Duration-05 ,Months

**COURSE-04**
**Diploma In Desktop Publishing**
@Introduction To Fundamentals
@Adobe Photoshop(Ver-7.0)
@Photo Express
@Adobe PageMaker(Ver-7.0)
@Corel Draw(Ver-11)
@Corel Photo Paint(Ver-11)
(Duration-05 ,Months

**COURSE-05**
**Diploma In Hardware Engineering**
@ Introduction To Fundamentals
@ Computer Assembling
@ Software Installation
@ Computer Software Upgrading
@ Computer Troubleshooting
@ System Configuration
(Duration-03 ,Months

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களினதும், அலுவலர்களினதும் தகவல் தொழில் நுட்பத்திறனை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கமைய கணனி பயிற்சிநெறிகளை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க மாவட்டக்கிளையில் ஆரம்பிக்கவுள்ளோம். மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சி.11155

விண்ணப்ப முடிவுத்திகதி:28-12-2004
விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்பங்களைஅனுப்பவேண்டிய முகவரி:-
தலைவர் / செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்
மாவட்டக்கிளை
கிளிநொச்சி.



# 31 ஆவது பிறந்த நாள் நினைவுகளில்



பிறப்பு
27
12
1973

வீரச்சாவு
13
10
1997

## கப்டன் அன்புரசன் - அருணா
(சொக்கலிங்கம் - கஜேந்திரன்)

கடமை என்று - நீ
சென்ற உன்
காலங்களில் - நின்
வரவிற்காய் களித்திருந்தோம் - எம்
காலங்களை அன்று

மாறாக உன்
நினைவுகளிலிருந்தும்
மீண்டெழும்ப இயலாது
தேடுகின்றோம் நிஜத்தை

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-5444)

# கடுமையான பனிப்பொழிவால் வடமாநிலங்கள் பாதிப்பு

கடும் பனிப்பொழிவு காரணமாக உத்தரப்பிரதேசத்தில் 13 பேர் பலியானார்கள். இமாச்சல பிரதேசத்தில் ஏரிகள் உறைந்துவிட்டன.

வட மாநிலங்களில் கடுமையாக பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. கடும் குளிர் தாங்காமல் பலர் பலியாகியுள்ளனர். உத்தரப்பிரதேசத்தில் பனிப்பொழிவு கடுமையாக இருக்கிறது.இதனால் வடமாநிலங்களில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச தலைநகர் லக்னோவில் குறைந்த பட்ச சீதோஷ்ண நிலை 7 பாகை செல்சியஸ். இதனால் கடும் குளிர்வாட்டி எடுக்கிறது. வீட்டுக் கதவு ஜன்னல்களை அடைத்துவிட்டு ,நடுங்கும் குளிரில் இருந்து தப்பிக்க தீ மூட்டி அடைந்துகிடக்கிறார்கள்.

பள்ளிக் கூடங்கள், அரச அலுவலகங்களில் வேலை நடைபெறவில்லை. இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடுமையான பனிப்பொழிவு காரணமாக உத்தரப்பிரதேசத்தில் இருந்து விமானங்கள், ரெயில்கள் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

இமாச்சல பிரதேசத்தில் சைபர் பாகைக்கும் குறைவாக சீதோஷ்ண நிலை இருப்பதால் பல ஏரிகளில் உள்ள தண்ணீர் உறைந்துவிட்டது.

# வாக்காளருக்குப் பணம்வழங்கினார் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது வழக்குப் பதிவு

(புதுடில்லி)

லல்லுப்பிரசாத்தை அடுத்து, வாக்காளர்களுக்கு பணம் கொடுத்ததாக ஐக்கிய ஜனதாதள கட்சியின் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் பணம்கொடுத்ததாகக் கூறப்படும் பெண்ணிடம் இருந்து பொலிசார் 500 ருபாயைப் பறிமுதல் செய்தனர்.

பீகார் மாநிலத்தில் வருகிற பெப்ரவரி மாதம் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அங்கு கடந்த 17 ஆம் திகதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வந்துவிட்டன. இந்த நிலையில் சமீபத்தில் அங்கு பிட்டா என்ற கிராமத்தில் பெண்களுக்கு லல்லுப் பிரசாத் பணம்கொடுத்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இது குறித்து தேர்தல் ஆணையகம் விசாரணை நடத்தி அவரிடம் விளக்கமும் கேட்டது.

அதேபோன்று ஒரு பிரச்சினையில் இப்போது முன் னாள் மத்திய அமைச்சரும் ஆணையாளரும், ஐக்கிய ஜனதாதள தலைவருமான ஜோர்ஜ் பெர்னாண்டசும் சிக்கி இருக்கிறார்.

பீகார் மாநிலம் முசாபர்பூர் பகுதியைச் சேர்ந்த சுனிதாதேவி (வயது 40) என்ற பெண் வறுமை காரணமாக 2 குழந்தைகளுடன் தற்கொலை செய்துகொள்வதற் காக அகராகாட் பாலத்தில் இருந்து ஆற்றுக்குள் குதித்தார். இதைப் பார்த்து ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் சுனிதாவையும் அவளது 2 குழந்தைகளையும் காப்பாற்றி கரைசேர்த்தனர்.

தற்போது சுனிதாதேவி முசாபர்பூர் சதார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

முசாபர்பூர் பாராளுமன்றத் தொகுதி ஜோர்ஜ் பெர்னாண்டசின் தொகுதியாகும் இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முசாபர்பூர் சென்ற அவர் சதார் ஆஸ்பத்திரிக்குச் சென்று , ஆற்றில் குதித்து தற்கொலை செய்ய முயன்ற பெண் சுனிதாவைப் பார்த்து உடல்நலம் விசாரித்தார்.

அப்போது அந்தப் பெண்ணுக்கு அவர் பணம்கொடுத்ததாக லல்லுப் பிரசாத்தின் ராஷ்டிரீய ஜனதாதளக் கட்சியினர் புகார் கூறியுள்ளனர். ஜோர்ஜ் பெர்னாண்டசும்,அவரது ஆதரவாளர்களும் ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு பணம் கொடுத்தது தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறிய செயல் என்றும், எனவே அவர்கள் மீது தேர்தல் ஆணையாளர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள்.

ஆனால் இந்தப் புகாரை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மறுத்து இருக்கிறார். வறுமை காரணமாக குழந்தைகளுடன் தற்கொலை செய்ய முயன்ற பெண் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இருப்பதை அறிந்து அங்கு தனது கட்சியினருடன் சென்று அவரை பார்த்ததாகவும் அவருக்குத் தனது கையில் இருந்து பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறினார். அத்துடன் கொடிய வறுமையின் காரணமாக தற்கொலைக்கு முயன்ற பெண்ணுக்கு உதவி செய் வதில் தவறு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# புத்தாண்டில் எனது அரசியல் பணி தீவிரமாகும் தனது பிறந்த நாளில் வாஜ்பாய்

(புதுடில்லி)

புத்தாண்டில் எனது அரசியல் பணி மேலும் தீவிரமாக இருக்கும் என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தனது 80 ஆவது பிறந்த நாள் விழாவில் கூறினார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் குவாலியரில் நேற்று முன்தினம் அவரது 80 ஆவது பிறந்த நாளை நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் மிகவும் எளிமையாகக் கொண்டாடினார். முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் மரணமடைந்திருப்பதையொட்டி 3 நாள் துக்கதினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனால் வாஜ்பாய் தனது பிறந்த நாளான நேற்று தனது பழைய நண்பர்கள் உறவினர்களை சந்தித்து அவர்களுடன் பேசி மகிழ்ந்தார். 10 ஆண்டுகளுக்கு பின்னர் இப்போது தான் முதல் முறையாக டில்லிக்கு வெளியே வாஜ்பாய் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

வாஜ்பாயின் கவிதைக்கு ஏராளமான ரசிகர்கள் உண்டு. அவர்கள் குவாலியரில் நேற்று அவரைச் சந்தித்து வாழ்த்துக் கூறினார்கள். அவர்கள் மத்தியில் வாஜ்பாய் பேசும்போது கூறியதாவது;

இதுவரை எனது வாழ்க்கை மிகவும் அமைதியாகக் கழிந்து விட்டது. புத்தாண்டில் இருந்து எனது அரசியல் பணி மேலும் தீவிரமாகும். பாராளுமன்றத்தில் நடத்தும் போராட்டம் மூலம் இன்னும் நான் தீவிரமாக அரசியலில் இருக்கிறேன் என்பதை மக்களுக்கு சொல்லிக் கொள்கிறேன்.எனது அரசியல் வாழ்க்கையில் முடிக்கப்படாமல் இருக்கும் பணியை நான் புத்தாண்டில் முடித்துக் காட்டுவேன் இவ்வாறு வாஜ்பாய் கூறினார்.


புதுவருட வாழ்த்துக்களுடன்

SUNDHARSON



Distributors Of all Kind Of ElectricityGoods

குளிரூட்டப்பட்ட காட்சியறையில் மலிவு விற்பனை

புதுவருடத் தினத்தையிட்டு

அசல் மின் சாதனங்களின் தெரிவுகளுக்கு

'சுந்தர்சன்'

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

- 'ABANS' தயாரிப்புகளின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்.
- 'Abans' தயாரிப்புகளான LG குளிர்சாதனப்பெட்டிகள், அதி குளிரூட்டிகள் எயர்கொண்டிஷனர்கள்,தொலைக்காட்சிப்பெட்டிகள், டெக் VCD&DVD பிளேயர்கள், மைக்ரோ அவன் (Oven).
- 'Abans' தயாரிப்புகளில் புகழ்பெற்ற 'HAIER' தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டிகள்.
- 'ANTON' தயாரிப்புகளின் யாழ். விநியோகஸ்தர்கள்.
- 'Anton' Pvc குழாய்கள் அதன் இணைப்புக்கள், கூரைப்பீலிகள் அதன் இணைப்புக்கள், நீர்த்தாங்கிகள், பிளாஸ்ரிக் பொருட்கள், கதவுகள் வெந்நீர்க்கலன்கள் அதன் இணைப்புக்கள், வலைகள், விவசாயிகளுக்கான நீர்க்குழாய்கள்.
- KELANI CABLES இன் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்.
- Keiani Cables இன் அதிசிறந்த தயாரிப்புகளான வீட்டு வயரிங் வயர்கள்.

மற்றும்

- மின் உபகரணங்கள், மின் விசிறிகள் ,மின் அழுத்திகள், சகலவிதமான மின் குமிழ்கள்,ரியுப் லைற் வகைகள், குறைந்த மின்சாரத்தில் கூடிய ஒளியைத்தரும் மின் குமிழ்கள், அதிநவீன தொங்கும் லைற்றுக்கள்,மின்சாரப் பரிசுப் பொருள்கள், மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள், கைப்பம்புகள், எண்ணெயில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள்.
- Orange,Kevilton,teriby,Somer,Sonki,sindoo ஆகியவற்றின் தயாரிப்புகளான 'சுவிச்' வகைகள். அதிசக்தி வாய்ந்த Dewalt, black & Decker Drillers,Grinders,Blowers மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- Kanchan,Sunda, Capricorn,Multinational,Jaipan,Sumeet அரைக்கும் மின் சாதனங்கள். Bonri,Nikai,Deck,National, Panasonic றைஸ்குக்கர்கள், பிறஷர் குக்கர்கள் போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
- Redheart, Nippon,MPL,Panasonic, Bright, National, Phillips, Black & Decker, Electrolux AGE மின் அழுத்திகள் Tokyo,Kobashi,Nippon, Belltron பிளாஸ்ரிக் கேத்தில்கள் மற்றும் எலக்ரிக் கேத்தில்களான Sanjo, Bright, Nippon ஆகியவை நியாய விலையில்.

மற்றும் சகல மின்சாதனங்களையும் ஒரே இடத்தில் அமைந்துள்ள நவீன காட்சியறையில்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

'சுந்தர்சன்' T.P/Fax: 021 222 2751 'SUNDHARSON'

யாழ். வீதி.மானிப்பாய். 0214591569 .Jaffna Road ,Manipay

குறிப்பு:~ ஒரு வீட்டுக்குத் தேவையான பொருட்கள்,கொள்முதல் செய்பவர்களுக்கும்,abans தயாரிப்புக்களான குளிர் சாதனப்பெட்டி,சலவை இயந்திரம்,தொலைக்காட்சிப்பெட்டி,அதிகுளிரூட்டிகள் போன்றவற்றைக்கொள் வனவு செய்பவர்களுக்கும் அப்பொருட்கள் உரிய இடத்தில் சேர்ப்பதற்கான வாகன வசதி செய்துகொடுக்கப்படும்.

சி. 10995


# நரசிம்மராவின் உடல் தகனம் செய்யப்பட்டது

நரசிம்மராவின் உடல் நேற்று முன்தினம் ஐதராபாத் நகரில் முழு அரச மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன்சிங், பாரதிய ஜனதாத் தலைவர் அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் கலந்துகொண்டனர்.

டில்லியில் கடந்த வியாழக் கிழமை மரணம் அடைந்த முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் உடல் அங்கிருந்து தனி விமானத்தில் நேற்று முன்தினம் ஆந்திர மாநில தலைநகர் ஐதராபாத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்குள்ள ஜூபிலி ஹாலில் நரசிம்மராவின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டு இருந்தது.

அரசியல் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும். பொதுமக்களும்,அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

# புங்குடுதீவு தீலீபன் மருத்துவ சேவையினர் தீவகத்தில் நடமாடும் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினால் தீவகத்தின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் நடமாடும் மருத்துவ சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. தீவகத்திலுள்ள பின் தங்கிய கிராமங்களில் வாழும் மக்களில் ஏராளமானோர் தமக்கான மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்ளத் தூர இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் மக்கள் எதிர் கொள்ளும் சிரமங்களைப் போக்கு வதனை நோக்கமாகக் கொண்டே "ஊர் தரிசிப்பு" என்ற பெயரில் தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையினர் தீவகத்திலுள்ள பல பின் தங்கிய கிராமங்களிலும் நடமாடும் வைத்திய சேவைகளை நடத்தி வருகின்றனர். (33)


DMI

A/L-2007(கலை வர்த்தகப் பிரிவுகள்)

சனவரி-08

காலை 8.00 மணி

DMI Jaffna

சி. 11158

## சிறிலங்காவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டி
# நியூசிலாந்து ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றி

நியூசிலாந்துக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கும் நியூஸ்லாந்து அணிக்கும் இடையில் நேற்று



நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஒக்லாண்டில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ஸரீபன் பிளமிங் சிறிலங்காவை துடுப்பெடுத்தாட அழைத்நார்.

இதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 42 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜெயசூரியா43 ஓட்டங்களையும்,டில்சான் 48 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

ஜயந்த,அத்தப்பத்து,சங்கக்கார, ஜெயவர்த்தனஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் கிறிஸ்கெயின்ஸ் 4 விக்கெட்டுக்களையும்,ரொப்பி 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 33 ஓவர்நிறைவில் 3விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் பிளெமிங் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களையும், சின்கிளெயர் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் வாஸ்,சந்தன தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




## இரண்டாவது ஒரு நாள் போட்டி
# பங்களாதேசுக்கு வரலாற்று வெற்றி



இந்திய-பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் டாக்காவில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 15 ஓட்டங்களால் இந்தியாவைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.



பந்து வீச்சில் சஹீர் ஹான், முரளி கார்த்திக், அகக்கார் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். துடுப்பாட்டத்தில் மொகமட் 67 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 230 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 47.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் சிறிராம் 57, முகமட் ஹைவ் 49, சர்மா 29, ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பைசியா, ரபீக், மொட்செயா, மெகமட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## பொலக், நிற்றினி அபார பந்துவீச்சு
# 139 ஓட்டங்களில் சுருண்டது இங்கிலாந்து





தென்னாபிரிக்காவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பொலக், நிற்றினி ஆகியோரின் அபார பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது முதலில் முடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. நாயணச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னர்பிக்கா இங்கிலாந்து அணியை துடுப்பாடுமாறு பணித்தது. 57.1 ஓவரில் 139 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது இங்கிலாந்து. துடுப்பாட்டத்தில் அன்ருஸ்ரோஸ் 25, ஜோன்ஸ் 24 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் பொலக்,நிற்றினி அபாரமாக பந்துவீசி 4,3விக்கெட்டுக்களை கைப்பற்றினர். பதிலுக்கு தனது முதல் இனிங்சை ஆடும் தென்னாபிரிக்க அணி ஆட்ட நேர முடிவில் மூன்று விக்கெட்டை இழந்து 70 ஓட்டங்களை பெற்றிருந்தது இன்று போட்டியின் இரண்டாம் நாள்

## திடீர் முதுகுவலி காரணமாக
# 2ஆவது டெஸ்டில் இருந்து விலகினார் இன்சமாம்

திடீர் முதுகுவலி காரணமாக அவுஸ்திரேலியாவுடனான 2 ஆவது டெஸ்டில் விளையாடவில்லை என்று இன்சமாம் கூறி விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகள் இடையேயான 2ஆவது டெஸ்ட்கிரிக்கெட் போட்டி மெல்போர்ன் நகரில் நேற்று ஆரம்பமானது: முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 491 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

இந்தநிலையில் பாகிஸ்தான் கர்ப்டன் இன்சமாம் திடீரென 'நான் மெல்போர்ன் டெஸ்டில் விளையாட போவதில்லை' என்று அறிவித்தார். எனக்கு முதுகுவலி பயங்கரமாக உள்ளது 3 வாரம் ஓய்வு எடுக்கும் படி டாக்டர்கள் ஆலோசனை வழங்கி இருக்கிறார்கள். என இன்சமாம் கூறினார். இப்படி இன்சமாம் விலகி இருப்பது பாகிஸ்தான் அணிக்கு பெருத்த அடி ஆகும். முதல் டெஸ்டில் பாகிஸ்தான் படுதோல்வி அடைந்ததால் அந்தநாட்டு ரசிகர் கள்இன்சமாமின் கொடும்பாவியை எரித்தார்கள். அந்தக் கோபத்தில் தான் அவர் இப்படி 2 ஆவது டெஸ் டில் ஆடாமல் ஒதுங்கி விட்டார் என்று கூறப்படுகிறது.

# பாக். சவால் மிகு ஓட்டம்



சதம் அடித்த யுஹானா



ஆட்டமிழப்புக் கோரும் கிலெஸ்பி

அவுஸ்திரேலிய பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று மெல்போர்னில் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான் நேற்றைய ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 318 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் யூசுப் யுஹானா சதமடித்தார். அவர் 111 ஓட்டங்களைப் பெற்றார். சல்மான் பட் 70 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிலெஸ்பி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


2005 Mega Intelligent Test
கணினி கற்கைநெறிகளுக்கான
மெகா போட்டிப் பரீட்சை

1 Diploma in Computer Software Engineering 5 months DCSE
2 Advanced Diploma in Web Multimedia ADWM
3 Professional Diploma in e - Developer PED
4 Diploma in Office Automation with Accounting DOA
5 Advanced Diploma in Hardware & Networking ADHN
6 Professional Diploma in Graphic Design PDGD

ASIAN COMPUTERS வழங்கும்
கணினி கற்கைநெறிகளுக்கான போட்டிப் பரீட்சை
கல்வி ஆண்டு 2005
Registered with Ministry of Tertiary & Vocational Education
வெல்லுங்கள் 75% புலமைப்பரிசில்



இலவச பரீட்சை 09-01-2005 ஞாயிற்றுக்கிழமை
போட்டிப்பரீட்சைக்கான அனுமதி முற்றிலும் இலவசம்

யாருக்கு ?
அனைவருக்கும் கணினிக்கல்வி என்ற நோக்கில், வயது வித்தியாசமின்றி கணினித்துறையில் ஆர்வமுடைய அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறலாம்.

பரீட்சைகள் பற்றிய விபரம்
பரீட்சைகள் G. C. E. (O/L) பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு சார்ந்ததாக அமையும். இப்போட்டிப் பரீட்சைகள் அரச பாடசாலைகளில் மட்டுமே நடைபெறும்.

மேலதிக விபரங்கள் - இலவச அனுமதிகள்
இலவச அனுமதிகளையும், விபரங்களையும் யாழ்நகர், சுன்னாகம், நெல்லியடி மற்றும் கிளிநொச்சியில் (கணினியியல் கல்லூரி) அமைந்துள்ள ASIAN கணினி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இம்முறை O/L பரீட்சை எழுதிய மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம்: 2 G, ஸ்ரான்லி வீதி, & 021-222 5677
சுன்னாகம்: 108,K.K.S.வீதி, (Jet Motors மேல் மாடியில்) சுன்னாகம். Tel : 071-2501589
நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198
கிளிநொச்சி: கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி.



## சிந்தனைக்கு

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போது தான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27--12-2004



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## தேசியத்தின் துயர்!

இயற்கையினால் தாயகப் பகுதியில் வரலாறு காணாத பெரும் அனர்த்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இவ் அனர்த்தமானது ஒரு தேசியத் துயர் எனக் கூறும் அளவிற்கு பாரிய அழிவினை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருந்த மக்களை மீண்டும் துயருறும் வகையில் இப்பெரும் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. அந்தமான் கடற்பிரதேசத்தில் கடலடியில் ஏற்பட்ட புவியதிர்வு காரணமாக எழுந்த பேரலைகள் கிராமங்களுக்குள் புகுந்ததினால் இப் பேரனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இவ் அனர்த்தத்தினால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் தொடர்பான உறுதியான தகவல்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. எனினும் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர் என்பது பெரும்பாலும் உறுதி செய்யப்பட்டதொன்றாகவே உள்ளது.

இதேவேளை பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான மக்களின் உடமைகளும் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அதாவது பெரும்பாலான மக்கள் உயிரை இழந்தது மட்டுமல்ல தமது குடியிருப்புக்கள், தொழில் உபகரணங்கள், உடமைகள், என்பனவற்றையும் இழந்து நிர்க்கதியானதொரு நிலையை அடைந்துள்ளனர்.

எதிர்வு கூறப்படமுடியாததொரு அனர்த்தமாக இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இவ் அனர்த்தத்தில் இறந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் ஆகியோராகவே உள்ளனர். பலர் குடும்பமாகவே பலியாகியுள்ளனர்.

கடந்த இரு தசாப்த கால யுத்தத்தினால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலும், பெரும் நெருக்கடியின் மத்தியிலுமே தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர். சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளான தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளில் அக்கறை காட்டாத நிலையில் மக்கள் தமது வாழ்விற்காகப் பெரும் போராட்டங்களை நடாத்த வேண்டியதாயிருந்தது.

இந் நிலையில் கிராமங்களில் ஏற்பட்டுள்ள இவ் அனர்த்தத்திற்கு சிறிலங்கா ஆட்சியாளர்களிடம் இருந்து எத்தகைய உதவிகள் கிடைக்கப் பெறும் என்பது குறித்து உடனடியாக எதையும் எதிர்வு கூற முடியாது. ஏனெனில் சிறிலங்கா அரசு மனிதாபிமான உதவிகளைக் கூட இன வேறுபாடு அற்ற முறையில் வழங்கப்படும் எனவும் எதிர்பார்ப்பதற்கில்லை.

இந் நிலையில் தாயகப் பிரதேசத்தில் பாதிப்பிற்குள்ளாகியுள்ள எமது மக்களுக்கு செய்யக்கூடிய ஒரே உதவி அவர்களின் துயர் துடைப்பதற்கு எம்மால் ஆன உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதே ஆகும்.

இத் துயரத்தில் இருந்தும் இழப்பில் இருந்தும் மக்கள் மீள்வதென்பதும் இலகுவானதொன்றான காரியமாக இருக்கப் போவதில்லை. ஏனெனில் இது இலகுவில் மீண்டுவிடக் கூடிய துயரமாகவோ அன்றி வெறும் நிவர்த்திக்கப்படக் கூடிய இழப்பாகவே இல்லை.

ஏனெனில் இத் துயரமானது இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமானதல்ல இது எமது தேசத்தின் துயரம். இதில் இருந்து மீண்டு வர வேண்டுமானால் அனைத்து மக்களுக்குமே இதற்குத் தம்மால் ஆன பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

ஆகையினால் உள் நாட்டிலும் சரி வெளி நாட்டிலும் சரி பரந்து வாழும் எமது மக்கள் இத்துயருற்ற மக்களுக்கு ஆறுதலளிக்கும் வகையிலான செயற்பாடுகளுக்கு உதவியளிக்க முன்வருதல் வேண்டும். ஏனெனில் இவர்களின் துயர் துடைக்கபடுவதாவது எமது தேசத்தின் துயர் துடைக்கப்படுவதற்கு ஒப்பானதாகும்.

# பெரும் மலை போல் கடல் கறுப்பாக வந்து கொண்டிருந்தது!

## வடமராட்சி கிழக்கில் உயிர் தப்பிய இளைஞர்

(அலுவலக செய்தியாளர்)

பெரும் வெடி ஓசையுடன் கடல் நீர் எங்கள் குடியிருப்பை நோக்கி வந்துகொண்டிருந்தது. என வடமராட்சிக் கிழக்கில் கடற் கொந்தளிப்பில் சிக்கி உயிர் தப்பிய இளைஞர் ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் காலை 9.00 மணி இருக்கும் நாங்கள் வீட்டிற்குள் இருந்து காலைச் சாப்பாட்டை சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது வெளியே கடலில் ஒரு பெரும் வெடி ஓசை கேட்டது. நாங்கள் சண்டை தொடங்கி விட்டதாக எண்ணி வெளியே வந்து பார்த்தோம் நினைக்கவே முடியவில்லை. எம்முடன் ஒரு பெரும் மலை போல கடல் கறுப்பாக வந்துகொண்டிருந்தது. நான் கடல் வருகுது என்று பலமாகக் கத்தினேன் இதற்கிடையில் என்னையும் கடல் மூடி விட்டது. நான் கடல் நீருடன் அள்ளுப்பட்டுச் சென்று கொண்டிருந்தேன். மரங்களுடன் அடிபட்டேன். எங்கே போகிறேன் என்று எனக்கு எதுவுமே தெரியாமல் இருந்தது. நான் செத்து விடுவேன் என்று நினைத்தேன். ஒருவாறு ஒரு மரத்தில் பிடித்துக் கொண்டு நின்றேன் பின்னர் சடுதியாக கடல் நீர் கடல் நோக்கி இழுத்தது. அது வேகமாக இருந்தது. நான் மரத்தை பிடித்துக் கொண்டு நின்றதால் தப்பி விட்டேன் என்றார். இதே வேளை இதில் உயிர் தப்பிய சுமன் என்பவர் தெரிவிக்கையில் எனக்கு ஒன்றும் தெரியவில்லை நான் வீட்டில் இருந்தேன் பெரும் வெடிச் சத்தம் கேட்டது. நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை. வெளியே அவல ஒலி கேட்டது. நான் நினைப்பதற்கிடையில் எனது கல் வீட்டுச் சுவர்களில் ஏதோ பலமாக மோதுகின்ற சத்தம் கேட்டது. அதற்கிடையில் எனது வீட்டுச் சுவர்கள் இடிந்து வீழ்ந்தன. நான் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டேன். எனது வீட்டுச் சுவர்களில் பிடித்துத் தப்புவோம் என்று தடவிப் பார்த்தேன் எதையுமே காணவில்லை. எனது முதுகில் ஏதே இடிந்து வீழ்ந்தது. அத்துடன் நான் வெள்ளத்தில் அடிக்கப்பட்டேன் எனது அம்மா மனைவி அப்பா சகோதரர்கள் பிள்ளைகள் எவரையுமே காணவில்லை. அவர்களும் என்னுடன் தான் இருந்தார்கள் பனை வட்டுக்களின் மேலாக நாங்கள் போய்க் கொண்டிருந் தோம். நான் தனியாகத்தான் தப்பியிருக்கிறேன் போல கிடக்கிறது. எனக் கதறினார் தனது குடும்ப உறுப்பினர்களை நினைத்து (லோ.தீ)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பிரதி மாகாண சு.சே.ப கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட அனர்த்தத்தில் சிக்கி காயமடைந்து மாவட்ட வைத்திய சாலையிலும் மற்றும் பாடசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றது. நோயளர்களுக்கு உடன் தேவையான உதவிகளை வழங்க முன்வரு மாறு கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அவசர வேண்டுகை விடுத்துள்ளார்.

நேற்று அதிகாலை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் காயம் பட்டவர்களின் அதிகரிப்பின் காரணமாக மாவட்ட வைத்திய சாலையில் இட நெருக்கடி ஏற்பட்ட போதிலும் அவசரநோயளர்களை தவிர்ந்த மற்றைய நோயாளர்கள் பாடசாலைகளில் தங்கவைத்து தற்போது சிகிச்சை மேற்கொள்ளப் பெற்று வருகின்றனர்.

ஆகவே இவர்களுக்கு தற்போது அவசரமாக ஆண், பெண்கள் இருபாலாருக்குமான மாற்று உடுபுடவைகள் மற்றும் படுக்கை விரிப்புக்கள், இளநீர் குளுக்கோஸ் சிற்றுண்டி வகைகள் என்பன தேவைப்படுகின்றன.

எனவே அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக சமூகத்தினர் பொதுமக்கள் அனைவரும் இவர்களின் நலனில் அக்கறை கொண்டு தங்களாலான உதவிகளை நல்கிடுமாறு பிரதிப்பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

# கீரிமலைக்கு பிதிர்க் கடன் செய்யச் சென்ற 17 பேர் காணாமல் போயினர்

யாழ் கீரிமலையில் நேற்று பிதிர்க்கடனுக்கு சென்ற 17 பேர் காணாமல் போயுள்ளனர் என அறியப்படுகின்றது. காணாமல் போனோரின் பெயர் விபரம் வருமாறு; பிரதீபன், கயாந்தன், ரவீந்திரன், பிரதீப், ரங்கநாதன், தேவராசா, ரகுராம், குமணசீலன், பிரசாந்தன், தயாபரன், யசீதரன், பிரகலாதன், நிசாந்தன், சடாநாதன், பிரதீபன் ஆகியோர் கீரிமலையில் காணாமல் போனவர்கள் ஆவர். மேலும் இருவர் பற்றிய விபரம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இதேவேளை கீரிமலை பிதிர்க்கடன் செய்யும் மண்டபம் அழிந்துள்ளது.

# வடமராட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவி வழங்க நடவடிக்கை

வடமராட்சியில் இடம்பெற்ற இயற்கையின் கோர அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக நேற்று மாலை 4.00 மணியளவில் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை அலு வலகத்தில் உடனடி பொது அமைப்புக்களுடனான சந்திப்பு நடைபெற்றது. யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், யாழ்.அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

இதில் கடல் பெருக்கால் இடம் பெயர்ந்த மக்கள் வடமராட்சியில் 15 பாடசாலைகளிலும், தென்மராட்சியில் 10 பாடசாலைகளிலும் உள்ளோருக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் அரச அதிபர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக இரத்தம் தேவைப்படுவதாலும் பொது மக்களை யாழ். போதனா வைத்தி யசாலையில் இரத்தம் வழங்கு மாறு கேட்டுள்ளார். இதேவேளை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவிக்கையில், தற்போது கடற்கரைப் பிரதேசங்களுக்கு மக்களைச் செல்ல வேண்டாமெனவும், வெடி பொருட்கள் அள்ளுண்டு சென்றிருக்கின்றதெனவும் அத்துடன் திரும்பவும் என்ன நடக்குமெனத் தெரியாதுள்ளதால் யாரும் கடற்கரைப் பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டாமெனவும் தெரிவித்தார்.

நேற்று வடமராட்சி தொண்டமனாறு தொடக்கம் மணற்காடு வரை இது வரை 63 சடலங்கள் மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் 34 சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன் போது அவர்களுக்கு மரணச் செலவிற்காக தலா 2000 வழங்கப்பட்டது. மிகுதிப் பேரின் சடலங்கள் இன்று காலை 9.00 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

நேற்று நடைபெற்ற உடனடி சந்திப் பின் பின் உடனடியாக மக்களுக்கு சுத்தமான உணவு, குடிநீர், பாய், நுளம்பு வலைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தருமபுரம் வைத்தியசாலையில் 14 பேரின் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன

நேற்யைதினம் ஏற்பட்ட கடல் பெருக்கால் சுண்டிக்குளம் பகுதியில் பலியான 14 பேரின் உடல்கள் தருமபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.-

சிவனேசன் (வயது- 26),சிவாகர் (வயது- 28), ராங்கநாதன் சிவலோஜினி (வயது-10), ச.சர்மினி (வயது-8), சங்கீதா (வயது-6),ஜீவன் (வயது - 8), பு.பார்பதிப்பிள்ளை (வயது-65), அன்ரன் ஜெனித்தா (வயது -27), மரியகுலா (வயது-18),அருளப்பு மரியமலர் (வயது -27), அன்ரன் வினோதா (வயது 7),அ.வினோதினி (வயது -5),அ.ஜெயந்தன் (வயது-8), ஆகியோரின் உடல்களே இனம் காணப்பட்ட நிலையில் தருமபுரம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை சுண்டிக்குளம் பகுதியில் பலரைக் காணவில்லை எனவும் தெரியவருகிறது. (14)

## தமிழீழவைப்பக அறிவித்தல்

வடக்கு கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி முல்லைத்தீவு நகரில் இயங் கிய தமிழீழவைப்பக ஊரகக் கிளை இன்று முதல் லூர்த்துமாதா சந்தி, 3ஆம் வட்டாரம் புதுக் குடியிருப்பில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

# 900 இற்கும் மேற்பட்ட காயமடைந்த மக்களுக்கு கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

நேற்றுக்காலை ஏற்பட்ட பாரிய கடல் கொந்தளிப்பின் காரணமாக கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகுந்ததன் விளைவாக வடமராட்சி கிழக்கு பிரிவைச் சேர்ந்த தாளையடி, மருதங்கேணி, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு,சுண்டிக்குளம் கிராமத்தைச்சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்திற்கு மதிகமானோர்.காயங்களுக்குள்ளான நிலையில் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளதுடன் பாரிய சொத்தழிவுகளும் ஏற்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற மேற்படி அனர்த்தம் காரணமாக காயமடைந்த தொழாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கும் எடுத்து வரப்பட்டதுடன் அவர்களுக்கான உடனடி வைத்திய சேவையினை கிளி.மாவட்ட வைத்திய அதிகாரிகளும் தமிழீழ சுகாதார சேவையினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

வைத்தியசாலையில் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக அவசர நோயாளர்களைத் தவிர்ந்த அனைத்து காயமடைந்த நோயாளர்களும் கிளிநொச்சி மகாவித்தியாலம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, மண்டபங்களில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

கடல் கொந்தளிப்பு காரணமாக கொல்லப்படடோரின்120 சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், நேற்று மாலை கிளிநொச்சி சென்திரேசா பாடசாலைக்கு சடலங்கள் எடுத்து வரப்பட்டு அங்கு வைத்து அடையாளம் காணப்பட்ட சடலங்கள் அரசியல் துறையினரால் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மற்றும் மேற்படி பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட 300 இற்கும் மேற்பட்ட மக்களின் சடலங்கள் மீட்புப்பணியினரால் எடுத்துவரப்பட்டு மருதங்கேணி வைத்திய சாலையில் நேற்று பிற்பகல் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மற்றும் பற்றைகாடுகளில் சிக்குப்பட்டு மீட்கப்பட்ட பல சடலங்கள் பல அந்தப் பகுதியில் வைத்து உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும் பலரது சடலங்கள் கடல் அலையினூடாக அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம்மெனவும் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கயிருக்கலாம்மெனவும் அப் பகுதியில் மீட்புப்பணியினை மேற்கொள்பவர்கள் தெரிவித்துள்ளனர். (சோ,கு)

# கடல் கொந்தளிப்பினால் மன்னாரிலும் பாதிப்பு

நேற்றைய தினம் இடம்பெற்ற கடல் கொந்தளிப்பால் மன்னார் பகுதியும் பாதிப் பிற்குள்ளானது.

மன்னார் தாள்பாடு கிராமத்தில் காலை 11.00 மணியளவில் கடல் கொந்தளிப்புக் காரணமாக கடல் நீர் பெருக்கெடுத்து கடற் கரையில் உள்ள படகுகளை அடித்துச் சென்று ஒதுக்கி விடப்பட்டுள்ளது. அச்சம் காரணமாக கரையோரப் பகுதி மக்கள் வெளியேறி வருகின்றனர். இம் மக்களுக்கான அவசர நிவாரணப்பணிகளை மனனார்அரசியல்துறையினர் மேற்கொண்டுள்ளனர் .மற்றும் மன்னார் அரிப்புதுறையில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பை அடுத்து மக்கள் பொற்கேணிப்பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பலர் மடுப்பகுதிக்கு சென்றுள்ளனர் இதேவேளை அனர்த்தங்களின் போது காயமடையும் பொதுமக்களுக்கு இரத்தம் தேவைப்படுவதால் மன்னார் பொது வைத்தியசாலையில் பொது மக்கள்,பெண்போராளிகள் இரத்ததானம் செய்துள்ளனர். (18)

## மட்டு...

வாழைச்சேனை வைத்தியசாலையில் 80இற்கும் மேற்பட்ட உடல்கள் மாலை வரை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் 100 உடல்கள் வரை கொண்டு வரப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார். ஒந்தாச்சிமடம் வயோதிபர் மடத்திலிருந்த 35 வயோதிபர்கள் கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அப்பகுதியிலிருந்து கிடைக்கும் தகவல்களின் படி சடலங்கள் மரங்களிலும் தொங்குவதாக தெரியவந்துள்ளது. கட்டட இடிபாடுகளுக்குள் இருக்கும் சடலங்களை மீட்கும் பணிகள் நேற்று மாலையுடன் முடிவடைந்துள்ளன. இன்று காலை மீண்டும் தொடரும் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்திலும் பெருமளவானோர்உயிரிழந்துள்ளனர். கல்முனைப் பிரதேசத்தில் 700பேர், நிந்தவூரில் 100பேர், காரைதீவில் 100பேர், திருக்கோவில் பிரதேசத்தில் 75பேர் மற்றும் பெரியநீலாவனைமுதல் பொத்துவில் வரை இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 30 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளன நேற்றைய அனர்த்தம் காரணமாக திருகோணமலையிலும் மூதூரிலும், தாக்வாநகர்,சம்பூர் உட்பட்ட பகுதிகளில் 500பேருக்கு மேல் பலியாகியுள்ளனர். 1300பேர் வரை காணமால் போயுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை மாங்கேணி, ஆனைமடு இலக்கு ,கல்குடா, கும்புறுமுனை , சித்தாண்டிக்குடி, ஏறாவூர், பாலமடு , கோட்டைமுனை, காத்தான்குடி, தாளங்குடா, குருக்கள்மடம் ,கொக்கட்டி சோலை, கற்குடா,செங்கலடி , வாழைச் சேனை போன்ற இடங்கள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் கும்புறுப்பிட்டி , அரக்ககண்டி, நிலாவெளி, செபமடு, சாம்பல்தீவு உப்புவெளி,கின்னியா , தம்பலகாமம் , தாமரைவில்லு, மூதூர் , கட்டைபறிச்சான், இலக்கந்தி, மலைமுந்தல் , தோப்பூர், ஈச்சிலம்பற்று, வெருகல் போன்ற பிரதேசங்களும் பெரும் பாதிப் புக்களைச் சந்தித்துள்ளது. (32)

## வடக்கு-..

பல்லாயிரம் மக்களுடைய வாழ்விடங்கள், உடமைகள் என்பன திடீரென வந்த கடலலையால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன் இவர்கள் இப் போது பாதுகாப்பான இடங்களில் பொதுக் கட்டடங்களில் அகதிகளாகத்தங்கியுள்ளனர். இது இரு தசாப்த கால கொடூரமான போரினால் பாதிக்கப்பட்ட, சமாதானத்தினுடைய அடிப்படை பிரதிபலனை அனுபவிக்காத, மக்கள் மீது தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள துக்ககரமான சம்பவமாகும். பொது மக்கள் சார்ந்த அமைப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் இயங்கும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் உதவுவதுடன் விடுதலைப்புலிகளின் வழி நடத்தலில் மருத்துவு உதவிகள், இடம் பெயர்ந்த மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்தல் போன்ற அவசர உதவிகளை வழங்குகின்றனர். இருந்த போதிலும் நிதி, உணவு விநியோகம் போன்றவற்றை ;மேற்கொள்வது கடினமானதாகவே உள்ளது. உதவி வழங்கும் அமைப்புகள் அதிகூடிய உதவியை வழங்க மிகவும் கடுமையாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பாதிப் படைந்த மக்களிற்கு முக்கியமாக; உடைகள், போர்வைகள்,பாய்கள், சமைத்த உணவுகள் தேவையாக உள்ளது. துரித உதவி நடவடிக்கைக்கான போக்குவரத்து வசதிகள் கூட பற்றாக்குறையாக உள்ளது. பொதுக்கட்டடங்களில் உள்ள. இடம் பெயர்ந்த மக்களிற்கு அடிப்படை சுகாதார வசதிகள் கிடைக்கக் கூடியதாக இல்லை. இது மிக பாரதூரமான சுகாதாரச் சீர்கேட்டையும் தொற்று நோய்களையும் ஏற்படுத்தும் என்ற அச்சத்தைத்தோற்று வித்துள்ளது கடலலைகள் மறைந்த போதிலும் மீளவும் நிகழும் என்ற திகில் தொடர்கிறது. இவ்விடம் பெயர்ந்த மக்கள் தொடர்ச்சியாக பொது கட்டடங்களில் வாழமுடியாது. அவர்கள் தமது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப அவசியமான உதவிகள் வழங்குவது தவிர்க்க முடியாதது நாம் சர்வதேச சமூகத்திற்கு இவ் அவசர நிலைமை மனித நேயபிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், நிதியுதவியை வழங்கும்படி கோருகின்றோம் இம்மனித அழிவுகளும் துன்பங்களும் அபூர்வமானவை உடனடி மனித நேய உதவிகள் தேவை நாங்கள் உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவை வேண்டி நிற்கிறோம் ஐ.நா முகவர்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது முயற்சிகளைப்பலப்படுத்தி உதவிகளை தேவையான நேரத்தில் அடைவதை உறுத்திப் படுத்தும் படியும் கோருகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெருமளவு...

படையினருமாக நூற்றுக்கணக்கான படையினருக்கு மேல் பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பல படையினருடைய உடல்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடல் கொந்தளிப்புக் காரணமாக வாழைச்சேனை பிரதேச சிறிலங்கா இராணுவ கட்டளை அதிகாரி (322வது படைப் பிரிவு) கேணல் குணரத்ன உட்பட இரண்டுபடை அதிகாரிகளுமாக 40 இராணுவத்தினர் பலியாகியுள்ளனர் மேலும் பலர் காணாமல் போயுள்ளனர். எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாசிக்குடா கடலை அண்டியுள்ள பிரதேசத்திலுள்ள கல்குடா இராணுவ முகாம், கல்குடா பொலிஸ் நிலையம் ஆகியனவும் முற்றாக தரைமட்டமாகியுள்ளன. இதனை விட கஜவத்தை, கல்லடி, மாங்கேணி இராணுவ முகாம்களும் அறுகம்பை, பானமை உட்பட்ட அம்பாறை மாவட்டத்தின் 4 விசேட அதிரடிப்படை முகாம்களும் தரை மட்டமாகியுள்ளன. கல்குடா இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான கேணல் குணரட்னவுடன் பாடசாலை விடுமுறையில் வந்திருந்த அவரது மகனும் இந்தச் சம்பவத்தின் போது பலியாகியுள்ளார். இதனை விட இந்த முகாமில் பணியாற்றிய 12 பேர், மாங்கேணி முகாமில் பணியாற்றிய 20 பேர், கஜவத்தை முகாமில் பணியாற்றிய 7 பேர் என இதுவரை வெளியான தகவல்களின் படி உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றொரு தகவலின்படி வடமராட்சி கிழக்கு மணல்காட்டு இராணுவ முகாம் முற்றாக அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் அங்கிருந்த பெருமளவு இராணுவ தளபாடங்கள் கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டு அயல் கிராமங்களில் ஒதுங்கியுள்ளன. அப் பகுதிக்கு மக்களை செல்ல விடாமல் தடுத்து அவற்றை மீட்கும் பணிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். (33,27,கா)

## சிறிலங்கா...

வெள்ளவத்தையிலும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. வெள்ளவத்தையில் நேற்றுக் காலை நில நடுக்கம் உணரப்பட்டது. காலியில் 400பேரும், மாத்தறையில் 500பேரும் பலியாகியுள்ளனர். அத்துடன் இங்கு அமைந்திருந்த சிறைச்சாலையின் சுவர் இடிந்து வீழ்ந்தபோது அங்கிருந்த 171கைதிகள் வரை காப்பாற்றப்பட்டனர். எனினும் மேலும் பலரின் நிலை குறித்து தகவல் இல்லை. இங்கு 400பேர் சிறை வைக்கப்பட்டிருந்தனர். காப்பாற்றப் பட்ட கைதிகள் பூசா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## முல்லை...

தும் முற்றாக அழிவடைந்துள்ளன. இதன் காரணமாக 1500 இற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் குழந்தைகள், பெண்கள்,முதியவர்களே அதிகமானவர். இவ்வாறு உயிழந்தவர்களின் உடல்கள் கட்டட இடிபாடுகளுக்குள்ளும் பற்றைகளிலுள்ளும் நீரினால் அடித்துச்செல்லப்பட்டு ஆங்காங்கே காணப்படுகிறது. மீட்புப்பணிகளை விடுதலைப்புலிகளின் தளபதிகளும் போராளிகளும்,தமிழீழ காவல்துறையினரும், கிராமமக்களும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். முல்லை மாவட்டத்தின் சில பகுதிகளில் மாத்திரம் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகிறது. சிலாவத்தை, கள்ளப்பாடு, முல்லைத்தீவு, செல்வபுரம் ஆகிய பகுதிகளே பெரும் பாதிப்புக் குள்ளாகியுள்ளன.

கடல் கொந்தளிப்பு நிலை தொடர்ந்தும் காணப்படுவதால் மீட்புப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாக மீட்புப்பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக கள்ளப்பாடு, செல்வபுரம்,சிலாவத்தை உள்ளிட்ட பலபகுதிகளில் மீட்புப்பணிகள் நடைபெறவில்லை.

கரையோரப் பகுதிகள் எங்கும் மரண ஓலம் கேட்டவாறே உள்ளது. பலர் குடும்பங்களாகவே கடல்நீரால் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர். கரையோரப் பிரதேசத்தில் கட்டடங்கள் அனைத்தும் இடிந்து கற்குவியல் களாக காணப்படுகின்றன. மக்களின் கோடிக்காணக்கான சொத்துக்கள் அழிவடைந்துள்ளது. காணாமல் போயுள்ளவர்களில் பலர் தேடிக்கண்டு பிடிக்கப்படவில்லை. இந்நிலையில் கடல் பலரை அடித்து சென்று இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களாலும், உயிரிழந்தவர்களின் சடலங்களாலும் புதுக்குடியிருப்பு மருத்துவமனை,முள்ளியவளை வைத்தியசாலை, வித்தியானந்தாக்கல்லூரி என்பன நிரம்பியுள்ளன. புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 275 இற்கும் அதிகமானவர்களின் சடலங்கள் நேற்று இரவு 6.45 மணிவரை கொண்டுவரப்பட்டிருப்பதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் தொடர்ச்சியாக அளவற்றுக் குவிந்து கொண்டிருப்பதால் இடம்,ஆளணிப் பாற்றாக்குறைகள் உட்பட பெரும் பிரச்சினைகள் எதிர்கொள்ளப் படுகிறது எனவும் கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் தெரிவித்தார். கடல்கொந்தளிப் புக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கான வைத்திய உதவிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் மருத்துவப் போராளிகள், திலீபன் மருத்துவப் போராளிகள் தமிழீழ சுகாதார சேவையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில், குடாரப்பு, குடத்தனை, செம்பியன்பற்று, தாளையடி,மருதங்கேணி,வேம்படி, உடுத்துறை, ஆழியவளை கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி,சுண்டிக்குளம், மாத்தளன், இரணைப்பாலை, ஆகிய கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் பொரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பல கிராமங்கள் அழிந்துள்ளன. வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்புக் காரணமாக உயிரிழந்த 300 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பெருமளவானவர்களை காணவில்லை. எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வட்டுவாகல் பாலத்தில் இரண்டு இடங்களில் பெரும் உடைவுகள் ஏற்பட்டுள்ளதுடன் பல வெடிப்புகளும்ஏற்பட்டுள்ளன.

(லோ,தீ,11-08)

## யாழ்...

தொண்டமனாறு தொடக்கம் மணற்காடு வரையாக வடமராட்சிப் பகுதியில் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளது. அழிவுக்குள்ளான பகுதியில் இருந்து மாலை 6.00 மணிவரை 59 சடலங்கள் வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டிருந்தது.

அழிவுகள் தொடர்பான சேத விபரங்கள் முழுமையாக அளவிட முடியாதுள்ளது. ஆன போதிலும் மக்களின் வாழ்விடங்கள் முற்றாக அழிந்து பல கோடிக்கணக்கில் அழிவுகள் ஏற்பட்டுள்ளதோடு மீனவர்களின் படகுகள், வள்ளங்கள் முற்றாக சிதைந்து போயுள்ளது.பாவனைக்கு உதவாத நிலையில் முழுதும் சுக்குநூறாகியுள்ளது.

பேரிரைச்சலோடு அலை எழுவதினை அவதானித்த மக்கள்வாழ்விடங்களை விட்டு வெளியேறும் முன்னர் நாற்பதடி உயரத்தில் எழுந்த அலையே சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. முதற் தடவையாக எழுந்த அலைசாதாரணமாக தரைதட்டியது. இரண்டாவது தடவை எழுந்த பேரலையே ஊர் மனைகளை மூடித் தள்ளியது.

இந்த அலையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு சற்று நேரத்தில் கடலை அடைந்து. பாதிக்கப்பட்ட மக்களை தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஒழுங்கு படுத்தலில் மக்கள் உடனுக்குடன் மீட்டெடுத்தனர். இவர்களுக்கான வாகன ஒழுங்கினையும் மேற்கொண்டுமக்களை வசதியான இடங்களில் தங்க வைத்தனர். வடமராட்சி அரசியல் துறையினர் மக்களுக்கான உடனடி நிவாரணங்களை வழங்கி வருகினறனர். பொது மக்களும் தமது பங்களிப்பை முன் வந்து செய்து வருகின்றனர். பல தொண்டர் நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை மணற்காடு, சவுக்கங் காட்டுப் பகுதியில் பல சடலங்கள் காணப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதிக்கு மக்களைச் செல்ல விடாது இராணுவம் தடுத்துள்ளதுடன் இராணுவத்தினரே சடலங்களை மீட்டு வருகின்றனர்.

(27,33,கா)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.